www.tamilarangam.net

தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

மாவீரர் நாள் சிறப்பிதழ் — 1993



# வெளிச்சம்

கார்த்திகை - 1993

20/=

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்களின் பிறந்தநாள் வைபவங்களுக்கும்,
மற்றும் எல்லா மங்கள நிகழ்வுகளுக்கும்
தரமான கேக் வகைகளையும், பிஸ்கற் வகைகளையும்
வழங்குகின்றோம்.

நெல்லியடியில்
சுபாஸ் பேக்கரி
என்று தொடர்பு கொள்ளுங்கள்.

ஐசிங் கேக்ஸ் + பிஸ்கற் வகைகள்
தரமான பாண் + பணிஸ்
எல்லாவற்றையும் குறித்த தவணையில்
தருகின்றோம்.

சுபாஸ் பேக்கரிக்கு வாருங்கள்
உங்களின் தேவை நிறைவடையும்.

# சுபாஸ் பேக்கரி

பிரதான வீதி,
நெல்லியடி.

www.tamilarangam.net

நள்ளிரவில் காதிலெழும் நாதமணிப் பேரொலியில்
நாளையொரு பூமலர்ந்திடும்.
நல்லசுட ரேற்றிவைத்து நாங்கள் தொழும்போதினிலே
நம்பு; பகை வீடெரிந்திடும்
பள்ளிகொள்ளும் வீரரது கல்லறையிற் கண்சொரிந்து
பார்; அவரின் முகம் தெரிந்திடும்.
பன்னிரண்டு மணியடிக்கப் பார்த்திருந்து நீவணங்கு
பாதை தெளிவாய்த் தெரிந்திடும்.
உள்ளமுருகின்ற உணர்வோடுவொரு நொடிப்பொழுது
உற்றுணர; விழிசொரிந்திடும்.
உத்தமர்கள் துயிலுமிடம் ஓடியவர் காலடியில்
ஊர்திரள; இருள் விடிந்திடும்.
தெள்ளுதமி ழாலவர்கள் செய்தபெரும் ஈகமதைத்
தேசமெங்கும் பாடு தினமே
தேக மழிந்தாலுமவர் தேசழியவில்லை யெனச்
செப்பு; தமிழீழஇனமே!

— மாலிகா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# வீரத்தின் விழுதே வாழி!

புதுவை இரத்தினதுரை

நில்லென நின்று, கைகள்
நீட்டென நீட்டி, போதும்
செல்லெனச் சென்று, ஏவல்
செய்வதே தொழிலாய்க் கொண்டு
புல்லெனக் கிடந்த எம்மைப்
புலியென நிமிரச் செய்த
வல்லவன், தமிழர் நெஞ்சில்
வாழ்பவன், தலைவன் வாழி!

கண்ணினை மூடி, மாற்றார்
கால்களில் ஆடி, யாரும்
உண்ணிடக் கொடுத்தால் அங்கே
உறங்கிய தமிழர் தன்னை
விண்தொட நிமிரச் செய்த
வியத்தகு வீரன் வாழப்
பண்ணெடு, பரணி பாடு
பாட்டுடைத் தலைவன் வாழி!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிங்களப் படைகள் வந்து
தேடின, ''பிடிப்போம்'' என்று
இந்தியப் படைகள் இங்கே
எழுந்தன, தோளைப் பற்றித்
தொங்கிய சிலரோ பச்சைத்
துரோகங்கள் செய்தார், எங்கள்
தம்பியோ சிரித்தான், வந்த
தடைகளை வென்றான் வாழி!

பிஞ்சிலும் புயலாய் நின்ற
போர்மற வீரன்! என்றும்
அஞ்சிடல் அறியான், யாரும்
அடக்கிட நினைத்தால் நெஞ்சில்
வெஞ்சினம் மூழும் எங்கள்
விடுதலைக் காற்றே! உன்னை
விஞ்சிட எவர்தான் உண்டு?
வீரத்தின் விழுதே! வாழி!

காற்று, வான் நிலவு, பொங்கும்
கடல், கதிர் உள்ளமட்டும்
போற்றிடும் தலைவன் இந்தப்
பூமியில் வாழ்வான், நாங்கள்
ஏற்றவன் பாதை செல்வோம்.
எங்களின் தேசம் மீட்போம்.
ஆற்றலின் திருவே! எங்கள்
அற்புத விளக்கே! வாழி!

26-11-1993 அன்று முப்பத்தொன்பதாவது அகவை காணும் எங்கள் தேசியத் தலைவர் **திரு. வே. பிரபாகரன் அவர்கள்** பல்லாண்டு பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**—வெளிச்சம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்த புதுவை

புதுவை இரத்தினதுரையின்
"நினைவழியா நாட்கள்" கவிதை நூலுக்கு
தமிழீழத் தேசியத்தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய

## வாழ்த்துரை

காலத்தின் மூச்சாக வாழ்வியக்கம் அசைகிறது. அந்தக் காலத்தையும், அந்தக் காலமாக விரியும் வாழ்வையும், அந்த வாழ்வாகஅவிழும் மனித இன்னல்களையும், விளைச்சல்களையும் நுட்பமாகச் சித்தரிக்கும் கலை இலக்கியங்கள் உன்னதமானவை.

தான் பிறந்த மண், தான் வளர்ந்த சூழல், தான் உறவு கொள்ளும் சமூகம், தான் வாழும் காலம் என்ற ரீதியில் வாழ்க்கையே ஒரு கலைஞனது படைப்புத் தளமாக அமைகிறது. வாழ்வின் புறநிலை உண்மைகளை மூலப் பொருளாக எடுத்துக் கலைப்பொருள் படைப்பவனே சிறந்த கலைஞன்.

புதுவை அண்ணா என நாம் அன்பாக அழைக்கும் புதுவை இரத்தினதுரை ஒரு சிறந்த கலைஞர்.

அவர் இந்த மண்ணைக் காதலிப்பவர். இந்த மண்ணின் மக்களை நேசிப்பவர். இந்த மண்ணின் விடுதலையை இலட்சியமாக வரித்துக்கொண்டவர். மண், மக்கள், விடுதலை என்ற முப்பொருளை மூலப்பொருளாக எடுத்துக் கலைப் பொருள் படைப்பவர். கவிதை அவரது கலைப்பொருள். அந்தக் கலையில் அவருக்கு இங்கு எவரும் நிகரில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புதுவை இரத்தினதுரையின் கவிதையில் ஒரு புதுமை இருக்கிறது; அழகும் ஆழமும் இருக்கிறது; ஒரு இசை இருக்கிறது; ஒரு ஈர்ப்பு சக்தி இருக்கிறது.

இந்தத் தேசத்தின் பண்பாட்டு மரபில் ஆழவேரோடி நிற்பதால் அவரது கவிதைக்கு அலாதியான வீச்சும், வலிமையும் உண்டு. சதையும் இரத்தமுமாக இந்த மண்ணின் பண்பாட்டுப் படிமங்கள் அவரது கவிதைக்கு உயிர்வடிவம் கொடுக்கிறது.

மனித அவலங்களையும் ஏக்கங்களையும் படிமக் காட்சிகளாகச் சித்தரித்து, இனவாதக் கொடூரத்தின் அராஜகத்தை அழுத்தமாக உணர்த்திக்காட்டுவதுடன் ஒடுக்குமுறைக்கு எதிரான ஆவேசம்மிக்க கொதிப்புணர்வையும் அவரது கவிதை தட்டி எழுப்புகிறது.

புதுவை இரத்தினதுரையின் படைப்பிலக்கியம் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு உந்து சக்தியாக இருக்கிறது. கவிதை உலகில், போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்த பெருமை அவரைச் சாரும். அவரது இலக்கியப் பணியின் முக்கியத்துவமும் இதில் தான் தங்கியிருக்கிறது.

எமது தேசத்தின் போராட்ட வாழ்வையும் வரலாற்றையும் தமிழீழ இலக்கிய இயக்கத்திற்குள் முதன்மைப் படுத்தி, தமிழ்த் தேசிய பிரக்ஞையை விழிப்புறச் செய்ததில் அவரது பங்கு கணிசமானது. விடுதலைக்காக ஏங்கும் தமிழினத்தின் ஆன்மதாகமாக வெளிப்பாடு காணும் அவரது கவிதை, போர்க்கால இலக்கியத்திற்கு புதுமையும் செழுமையும் கொடுக்கிறது.

புதுவை இரத்தினதுரை இலக்கியப் படைப்பாளியாக மட்டுமன்றி, ஒரு இலட்சியப் போராளியாகவும் எமது விடுதலைஇயக்கத்தில் இணைந்து நிற்பவர். இலக்கியப் படைப்பிலும், இலட்சியப் பயணத்திலும் அவரது பணி சிறப்புடன் தொடர எனது நல்லாசிகள்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெளிச்சம்

கார்த்திகை 1993
இதழ் - 20

நவம்பர் 27 மாவீரர்நாள்.

எம் மண்ணுக்கு வீரம்விளைந்துவிட்டது என்பதை உரத்த குரலெடுத்து உலகுக்குச் சொல்லிய நாள்.

அடக்கிவைத்து, எம்மை இனியும் ஆளமுடியாதென்று அந்நியருக்கு அறைகூவல் விடுத்தநாள்.

உயிர்கொடுத்தே உரிமையைப் பெறமுடியும் என்பதை முதற்சாவு மூலம் முரசறைந்த நாள்.

ஆம்! மாவீரர்நாள் - தமிழீழத்தின் தேசியநாள்.

சத்தியநாதன் என்ற லெப். சங்கர், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் போராட்ட வரலாற்றில் முதற்சாவை இன்றுதான் சந்தித்தான்.

ஒரு காலத்தில் எதிரி எட்டி எட்டி உதைக்கவும், உதைத்த காலுக்கு முத்தமிட்டுக்கிடந்தது எங்கள் இனம்.

காலிமுகத்திடலிலும், கச்சேரி வாசலிலும் ஆயுதமற்று அறப்போர் செய்த எங்கள் இனத்தை குண்டாந்தடியாலும், துப்பாக்கிப்பிடியாலும் தாக்கித்தூக்கியெறிந்தது சிங்களப் பேரினவாதம்.

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு பஸ்ஸில் புறப்பட்டால் பத்து இடத்திலாவது தமிழரை இறக்கி 'நீங்கள் யார்?' 'நீங்கள் யார்?' என்று கேட்பது போல அடையாள அட்டை பார்ப்பார்கள். வரிசையில் நிற்க வைத்து கேள்விகள் கேட்பார்கள். எங்கள் தங்கைகளைத் தடுத்துவைத்து 'நண்டு கொண்டு போகின்றாயா?' என்று இரட்டை அர்த்தத்தில் பரிகசிப்பார்கள்.

இத்தனையையும் கூனிக்குறுகிப் பொறுத்துக்கொண்டு என்ன செய்வது என்று வழிதெரியாது இருளில் கிடந்தது எங்கள் இனம்.

நவம்பர் 26ஆம் நாள் இவற்றையெல்லாம் இல்லாமல் செய்யும் வழிகாட்டவென்று வல்வைக் கடற்கரையில் ஒருபிள்ளை விழிதிறந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நவம்பர் 27ஆம் நாள் இவற்றையெல்லாம் இல்லாமற்செய்ய இரத்தம் சிந்தாமல், உயிரை விலைகொடுக்காமல் விடிவில்லை என்பதைக்கூறி ஒரு பிள்ளை விழிமூடியது.

இங்கு ஜனனமும், மரணமும் விடுதலைக்கான விளைபொருட்களாயின.

இன்று பல்லாயிரக்கணக்கான மாவீரர்கள், தமிழீழ விடுதலையென்னும் தங்கள் கனவுகள் நனவாகும் என்ற நம்பிக்கையில், சுதந்திரம் பெறும் நாளில் எங்கள் தலைவன் ஏற்றப்போகும் தேசியக்கொடி காற்றில் அசையும் காட்சியைக் காண்பதற்காக கல்லறைக்குள்ளே கண்மூடிக்காத்திருக்கின்றார்கள்.

தாங்கள் ஒப்படைத்துவிட்டுவந்த பணியை தங்கள் தோழர்கள், தோழியர்கள், தாங்கள் நேசித்த மக்கள், தங்களை நேசித்த மக்கள் தொடர்ந்தும் முன்னெடுத்துச்சென்று இலக்கை அடைவார்கள் என்ற நம்பிக்கையோடு விழிமூடிக் குழிகளுக்குள்ளே குடியிருக்கின்றார்கள்.

ஒவ்வொரு மாவீரர் நாட்களிலும் நள்ளிரவில் கேட்கும் நாதமணிச் சத்தம், 'விடுதலை பெற்றது தமிழீழம்' என்பதை தங்களுக்கு வந்து சொல்லுமென்று எதிர்பார்த்துக்கொண்டும், தங்கள் கல்லறையில் நாங்கள் ஏற்றும் நெய்விளக்குச் சுடரில் தமிழீழத்தின் வரைபடத்தையே கண்டு களிப்படைந்து கொண்டுமிருக்கின்றனர்.

மாவீரர் துயிலும் இல்லங்கள், மாவீரர்கள் புதைந்த இடங்களாக நாம் எண்ணக்கூடாது. தமிழீழம் என்றுகிடைக்குமென்று ஏங்குபவர்கள் தூங்குமிடங்களாகக் கொள்ளுவோம்.

அந்தப் புனித இடத்தில் பூக்களைவைப்பது மட்டுமல்ல எங்கள்கடமை. கூப்பிய கரங்களுடன், விழிசொரிவது மட்டும்தான் எங்கள் பணியாகக் கொள்ளல் ஆகாது.

தமிழீழத்தைப் பெற்று, மாவீரர்களின் தாளடியில் வைப்பதே நாங்கள் அவர்களுக்குச் செய்யும் வரலாற்றுக் கடமையாகும்.

அலங்கார வளைவுகள், அர்த்தராத்திரியில் நெய்விளக்குகள், கண்ணீர் மாலைகள் எல்லாம் சம்பிரதாயச் சடங்குகளாக மாறக்கூடாது.

அடுத்த மாவீரர்நாள் விடுதலைபெற்றமண்ணில் என்று நாங்கள் ஒவ்வொருவரும் சபதமேற்றுக் கொள்ளவேண்டும். இதையே இலக்காகக் கொண்டு நாங்கள் நகரத் தொடங்கவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாகத்துக்குக் கொண்டுவந்துள்ளோம் நாகதேவன்துறை

பழஞ்சோற்றுப்பாவலன்

விழிமூடித் தூங்கும் வேங்கைகளே!
விழித்துக் கொள்ளுங்கள்.
நாங்கள் மலர்தூவ வந்துள்ளோம்.
கண்ணீரால் உங்கள் கல்லறையைக் கழுவி
சுடரேற்ற வந்துள்ளோம்.
குருதி உறைந்தாலும் உறுதி குலையாத
உத்தமர்களே!
கைகளில் என்னகொண்டு வந்துள்ளோம் என்று
கண்களைத் திறந்துபாருங்கள்.
இந்த வருடம்,
உங்கள் தாயகத் தாகத்துக்கு
'பூநகரி'யையும்
'நாகதேவன்துறை' யையும்
எடுத்து வந்துள்ளோம்;
நாக்கையாவது நனைத்துக் கொள்ளுங்கள்.
அடுத்த வருடம்
உங்கள் கல்லறைக்கு விளக்கேற்ற வரும்போது
இன்னும் எம்மால் முடிந்தவற்றை
எடுத்துவருவோம்.
தாயகத்தின் பாதியையாவது
பாதங்களில் வைப்போம்.
நாங்களும் உங்களுக்கு அருகே
என்றோ ஒருநாள் உறங்கவருவோம்.
அதுவரை
ஒன்றாகி நின்று போரிடுவோம்.
நாங்கள் விழுந்தால்...... நமது பிள்ளைகள்.
பிள்ளைகளும் சரிந்தால் .....
பேரப்பிள்ளைகள் போரிடுவார்கள்.
இது அஞ்சலோட்டம்.
வெற்றிகள் கிட்டும்வரை
கம்புகள் கைமாறுமேதவிர
இலக்குகள் இடம்பெயரமட்டாது.
தாய் மீது ஆணை;
எம் தலைவன் மீது ஆணை;
மண்ணுள் கிடக்கின்ற மாணிக்கங்களே!
உங்கள் உறுதிமீது ஆணை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# அலைகள் ஓய்வதில்லை

மலரன்னை

கார்த்திகை மாதத்துக் காலைப்பொழுது. மப்பும், மந்தாரமுமாக இருக்கிறது. காலையில் இதமாக வீசும் இளந்தென்றல் எங்கோ தொலைந்து விட்டதால், மரம் செடிகள் எல்லாம் துக்கம் அனுஷ்டிப்பவை போல் ஆட்டம் அசைவின்றி மௌனம் சாதிக்கின்றன. எதிலும் ஈரம். நிலம் நெகிழ்ந்து போயுள்ளது.

என் மனத்திலும் ஏதோ இருள் படர்ந்திருப்பது போன்ற பிரக்ஞை பெருகிப் பெருகிக் கசிகிறது. உள்நெஞ்சில் ஈரம். அந்தக் காலை வேளையில் முகத்தைக் கழுவிய நான், பூந்தோட்டத்திற்குள் நுழைகிறேன். அங்கு பூக்களைக் கொய்து கைகளிரண்டிலும் ஏந்தியவாறு வீட்டினுள் நுழைகிறேன். நேராக ஹாலுக்குள் போகிறேன்.

மாலையிடப்பட்டிருக்கும் என் மூத்த மகளின் படம், என்னை வாவென்று வரவேற்பதைப் போன்ற ஒரு பிரமை. பூக்களைப் படத்தின் முன்னால் வைக்கிறேன். வைத்து விட்டுச் சிறிது நேரம் என் மகளது உருவத்தைப் பார்க்கிறேன். விழிகள் நடுங்குகின்றன. வரிப்புலிச் சீருடையில் தோற்றமளித்த அவளது பார்வையில் தெரிவது உறுதியா? வெறுமையா? என்னால் எதையுமே ஊகிக்க முடியவில்லை. என் கண்களை நீர்த்திரை மறைக்கிறது.

என் மனக் குரல் பேசுகிறது. சரியாய் இண்டைக்கு ஒரு மாசம் ஆகிட்டுது. என்ரை பிள்ளை இனி என்னைத் தேடி வரமாட்டாள். அம்மா என்று கூப்பிடமாட்டாள். என்னால் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஒரு மாத காலம் கடந்து விட்டது. என் மனதுக்கு இந்த உண்மையை ஏற்றுக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொள்ளும் பக்குவம் வர வில்லையே. சீ......! வீர மகளைப் பெற்றெடுத்த நான் ஒரு கோழை. என் னையே நான் நொந்து கொள்ளுகிறேன்.

என் நினைவலைகள் அவளையே சுற்றி வட்ட மிடத் தொடங்குகின்றன. அவளது பிடிவாதப் போக் கும், செயல்களும் என் கண்முன்னே நிழலாடுகின் றன. சிறுவயதிலிருந்தே அவளது நினைத்ததைச் சாதித்து முடிக்கும் செயல் கள், சில சமயங்களில் எனக்கு எரிச்சலை ஏற் படுத்துவதுமுண்டு. படிப் பில் எப்பொழுதும் ஆர் வம். தன்னம்பிக்கையின் துளிப்பு அவளை எதிலும் முனைப்பாக்கியது, பரீட் சையில் எல்லாப்பாடங் களிலும் அதி திறமைச்சித்தி பெற்றாள். அவள் மேல் வகுப்பில், விஞ்ஞானப் பிரிவில் ஆர்வமிகுதியுடன் சேர்ந்தாள். வெற்றியின் பூரிப்பு அவளில்.

''அம்மா! உங்கடை ஆஸ்மா நோய்க்கு நான் டொக்டராய் வந்துதான் வைத்தியம் செய்யவேணும். அது வரைக்கும் பொறுத் திருங்கோ. அது மட்டும் இருப்பியளோ.........! அல்லது...'' என்று விளை யாட்டாகக் கூறுவாள்.

இப்போது நான் இங்கே கல்லாய்ச் சமைந்திருக் கிறேன். அவள் போய்விட் டாள்; மாவீரர் வரிசையில் இடம் பிடித்து விட்டாள். நினைவுகளின் மையத்தில் அவள்! காணும் எதிலும், எப்பொழுதும் அவள். கல்ல றையில் துயில்கின்ற போதும் நினைவுகள் ஒரு காவியமாகப் பெருகிப் பெருகி ..

அந்நாட்களில் அவள் வித விதமான உடைகள், நகைகள் என்பனவற்றில் அதிக நாட்டம் காட்டி னாள்.

''அம்மா! என்ரை பிரண்ட்காயத்திரிக்கு அவை யின்ரை அப்பா, சவூதி யிலை இருந்து ஒரு செயின் அனுப்பி இருக்கிறார். நல்ல வடிவாயிருக்கம்மா. அது மாதிரி எனக்கும் ஒண்டு வேண்டித்தாங்கோ''

அவள் விருப்பத்துக்கு நான் என்றுமே மறுப்புத் தெரிவித்தது கிடையாது. மூன்று பெண்களைப் பெற்றுவிட்டோமே, அவர் களின் ஆசைகளை நிறை வேற்றப் போதிய பணம் உழைக்க வேண்டுமென்ற எண்ணத்துடன், என் கணவர் வெளிநாட்டிலி ருந்து உழைத்துக் கொண் ருக்கிறார்.

உடனே நான் அவளை யும் கூட்டிக்கொண்டுபோய் அவள் விருப்பம் போலவே ஒரு கழுத்துச்சங்கிலியை வாங்கிக் கொடுக்கிறேன்.

''அம்மா என்ரை நம்பருக்கு நீலக்கல் பதிச்ச பென்ரன் தான் பொருத்த மாம்'' என்று சொல்லி ஒரு பென்ரனையும் தேர்ந் தெடுக்கிறாள். அவள் அதனைச் சங்கிலியில் கோர்த்து அணிந்தபோது அவள் அடைந்த மகிழ்ச்சி... தன் சினேகிதிகளிடம் அதைக் காட்டியவள்;

''என்ரை அம்மா நல்லவ. எனக்கு, நான் கேட்டதெல்லாம் இல்லை எண்டு சொல்லாமல் வாங் கித்தாறவ. அம்மாவில எனக்குக் கொள்ளை விருப் பம். ஆனால் அம்மாவுக்கு அடிக்கடி ஆஸ்மா வாறது. அவவுக்கு ஏதும் நடந்தால் நான் என்ன செய்வனோ? எனக்கு நினைச்சுப் பாக் கேலாமல் கிடக்குதப்பா'' என்று சொல்லிக் கொண் டது, எனக்கு இப்போது நடந்த நிகழ்ச்சி போன்று பசுமையாக நினைவில் நிற்கி றது.

மூன்று வருடங்களின் முன், எம் தாயகத்தைப் போர்மேகங்கள் சூழ்ந்த வேளை, அவள் தன் கூண் டைத் துறந்து புறப்பட்ட போது கடிதமொன்றை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எழுதி மேசையில் வைத்து, அதன் மேல் அந்தச் சங்கிலி யையும் வைத்துவிட்டுப் போனது எனக்கு ஞாபகத் தில் வருகிறது.

மீண்டும் அவளது படத் தில் என் புலன் செல்கிறது. அவளது கழுத்தை இப்போ தும் ஒரு மாலை அலங்கரித் திருக்கிறது. ஆனால் 'பென் ரன்' சட்டைப் பைக்குள் மறைவிடம் தேடியிருக் கிறது.

□ □ □

பயிற்சி முடிந்தபின் ஒருநாள் தேவகி வீட்டிற்கு வருகிறாள். என்னையறி யாமல் நான் உணர்ச்சி வசப்பட்டுப் போகிறேன். அவளைக் கண்டதும் கட்டி அணைத்து முத்தமிட்டுக் கண்ணீரைச் சொரிந்து விட்டேன்.

''அம்மா! இதென்ன நீங்கள் இப்பிடி அழுகிறி யள். நான் என்ன பிழை யான செயலையே செய் திட்டு வந்து நிக்கிறன். இந்த மண்ணைக் காக்கிற தைரியத்தோட என்ரை மகள் வந்து நிக்கிறாள் அவளை ஆசீர்வதிப்பம் எண்டில்லாமல்...... என் னம்மா கோழை மாதிரி அழுகிறியள். சீ! இப்பிடி யெண்டால் நான் வராமல் விட்டிருக்கலாம்''

அழுந்துக் கொள்ளு கிறாள். அவள் இதயத்தில் மறைத்து வைத்திருக்கும் பாச உணர்வுகளை அவளது கண்களே எனக்குக் காட் டித் தந்துவிட்டன. அந்த நிகழ்வின் பின் நான் அவளைக் காணும் போதெல்லாம் என் மன உணர்வுகளை மிகச் சிரமப் பட்டு மறைத்து வந்திருக் கிறேன்.

அவளை நான் பாண்ட் சேட்டுடன் காணும்போது எனக்கொரு மகன் பிறக்க வில்லையே என்றிருந்த ஏக்கமும் எனக்கு அற்றுப் போய்விட்டது. தேவகி, ஓய்வு கிடைக்கும் நேரங் களில் வீட்டிற்கு வந்து போய்க் கொண்டிருந்தாள்.

என் இனத்தவர் சிலர் எனக்கு அடிக்கடி உபதேசம் பண்ணத்தொடங்கினார் கள்.

''ஏன் கமலா, தேவ கியை இப்பிடியே விட்டிட்டு இருக்கிறாய். வீட்டை வந்து போகைக்க, விட் டிட்டு வரச் சொல்லலாம் தானே''

-அவர்களின் கதையைக் கேட்டு என் மனம் ஊமை யாய்ச் சிரிக்கும். நல்ல வேளை. நான் தேவகியிடம் என்றுமே என் மனச்சாட் சியை அடகுவைக்க முயற் சிக்கவில்லை. அப்படி நான் முயன்றிருப்பின் அவளது கணிப்பில் நான் எவ்வளவு சிறுத்துக் கூனிக் குறுகிப் போயிருப்பேன்? இந்த நினைவு எனக்குச் சிறிது நிம்மதியை ஏற்படுத்துகி றது.

தேவகி வீட்டிற்கு வந்தாலே வீடு கலகலக் கும். தங்கைகள் இருவரும் அக்காவுக்குப் பிடித்தமான உணவு வகைகளைச் சேக ரித்து வைத்திருப்பார்கள். அவர்கள் மூவருமாகச் சேர்ந்து சாப்பிடுவதைப் பார்த்து என் மனம் நிறைந்து போகும். தேவகி, வாய் ஓயாமல் தன் போராட்டச் சாதனை களைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருப்பாள். தங்கை மார் இருவரும் ஆவலுடன் கேட்டுக் கொண்டிருப்பார் கள்.

ஒரு நாள், என் இளைய மகள் ரேவதி ''அம்மா! அம்மா!!'' என்று அழைத்த வாறு வந்தாள்.

''அம்மா! எங்கடை அக்கா 'பிக் அப்' ஓடிக் கொண்டுபோறா. அவ என் னைக் காணேல்ல. நான் அவவைக் கண்டிட்டன். நல்ல வேகமாய் ஓடிக் கொண்டு போறா அம்மா''

என்னையறியாமல் என் மனம் புளகாங்கித மடை கிறது. அதே சமயம் ரேவதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யின் ஆர்வமான கதைகள், செயல்களில் உள்ள மாற்றம் என்னைத் திகிலடையச் செய்கிறது. என்னால் எதையுமே சொல்லவோ, செய்யவோ முடியாத ஒரு நிலையில் நானிருக்கிறேன். எனக்கு மனக்குழப்பங்கள் ஏற்படும் வேளைகளில் எத்தனையோ மைல்களுக் கப்பால் இருக்கும் என் கணவரை நினைத்துக் கொள்வேன். அவர் அருகில் இருந்திருந்தால் என் உள்ள உணர்வுகளை அவரிடம் சொல்லிப் பகிர்ந்து சிறிது ஆறுதலடையலாம். என்ன செய்வேன் நான்? என் உணர்வுகளை எழுத்தில் வடித்து அவருக்கு அனுப்பி வைப்பேன். அவ்வளவு தான்.

சென்ற மாதம் எட்டாம் திகதி, தேவகியின் பிறந்த நாள். அதற்குச் சில நாட்களின் முன் தேவகி வீட்டிற்கு வந்திருந்தாள்.

''அம்மா! என்ரை பேத்டே எட்டாந் திகதி வருகுதெல்லே. அதுக்கு என்ன ஸ்பெஷலாய்ச் செய்து தரப்போறியள்? என்ரை 'பேஸ்'ஸிலை இருக்கிற பிள்ளையளுக்குக் குடுக்க வேணும்''

அக்காவின் பிறந்த நாளுக்குத் தங்கைமார் இருவரும் 'கேக்' செய்கிறார்கள். மிக அவதானமாகத் தமிழீழ உருவ அமைப்பை ஐசிங் செய்து கொள்கிறார்கள். வேறு சிற்றுண்டி வகைகளையும் தயாரித்து வைத்துக் கொண்டு, தேவகியின் வரவுக்காகக் காத்திருக்கிறார்கள்.

இரவு ஏழு மணி போல் தேவகி வந்தாள். தங்கைமார் இருவரும் அக்காவிற்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவிக்கிறார்கள். நான் அவளை ஆரத்தழுவி முத்தமிட்டு விட்டு, அன்று அவளுக்காக அர்ச்சனை செய்து கொண்டுவந்த திருநீற்றை, அவளது நெற்றியில் பூசி விடுகிறேன்.

அவளோ அவசரமாகத் தனது கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த குப்பியை எடுத்துத் திருப்பித் திருப்பி நன்றாகப் பார்த்து விட்டு,

''அம்மா, இறுக்கிக் கட்டிப் பிடிச்சா, குப்பி உடைஞ்சிருக்குமோ எண்டு பயந்திட்டன்'' சிரித்தவாறே கூறினாள்.

''அம்மா எனக்கு வீரத் திலகமிடுகிறா. மகளே! வெற்றியோடு திரும்பி வா என்று. என்னம்மா!'' என்கிறாள்.

''அக்கா! இஞ்சை வந்து பாருங்கோ. நாங்கள் செய்து வைச்சிருக்கிற பேத்டே கேக்கை''

ரேவதியின் அழைப்பைத் தொடர்ந்து போய்ப் பார்த்தவள், மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தாள். ''ரேவதி, கேக்கை இப்பிடியே கொண்டுபோய் எங்கடை பிள்ளைகளுக்குக் காட்ட வேணும். எல்லாம் வடிவாய் 'பாக்' பண்ணித் தாங்கோ'' என்கிறாள்.

கடைசியாக நானும் பிள்ளைகளும் தேவகியை வழியனுப்புவதற்காக கேற்றருகில் நிற்கிறோம்.

''அம்மா போட்டு வாறன். ரேவா, சாரு போட்டு வாறன்''

''த்ஸ்! த்ஸ்! த்ஸ்!''

சடாரிட்டது பல்லி. பீதியுற்ற ரேவதியும் சாருவும் கேட்டார்கள்;

''அம்மா! ஏன் பல்லி சொல்லுது?''

என் மனதிலும் சலனம். அதை வெளிக்காட்டாமல், 'அது மாலைப்பல்லி. சொன்னாலும் அர்த்தமில்லை' என்று கூறி மழுப்புகிறேன்.

அதுவே கடைசிச் சந்திப்பாக அமைந்து விட்டது. தமிழீழக் கேக்குடன் போனவள், தமிழீழக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கனவுடன் போய்விட்டாள். தேவகியின் வீரமரணத்தால் துவண்டு போகிறேன் நான். அவளது அருமைத் தங்கையரைத் தேற்ற வழியற்றுத் தவிக்கிறேன்.

என் மனதில் ஓர் உறுதி பிறக்கிறது. என் துயரை மனதில் மறைத்துக் கொண்டு அவர்களைத் தேற்ற முனைகிறேன்.

''பிறந்த நாங்கள் எல்லாரும் ஒரு நாளைக்குச் சாகிறதுதானே. எத்தினை பேர் எத்தினை விதமாய்ச் சாகினம். போன மாதம் 'சுப்பர்சொனிக்' அடிச்சு ரேவதியின்ரை வகுப்புப் பிள்ளை ஒன்று உடல் சிதறிச் சாகேல்லையே. அப்பிடி ஒண்டு எங்களுக்கை நடந்திருந்தால் என்ன செயயிறது? கொக்காவின்ரை சாவு அர்த்தமுள்ளது. அதுக்காக நாங்கள் கவலைப் படக்கூடாது.''

''ஓம் அம்மா! நீங்கள் சொல்லுறது சரிதான்'' ரேவதி என் கூற்றை ஏற்றுக் கொள்ளுகிறாள்.

''அம்மா!'' என்ற குரல் என்னை நினைவலைகளிலிருந்து மீட்கிறது.

''என்னம்மா பேசாமல் அக்காவின்ரை படத்தையே பாத்துக்கொண்டு நிக்கிறியள். அக்காவிட்டப் போக வெளிக்கிடுங்கோவன்''

மூவரும் போகிறோம். ''மாவீரர் துயிலும் இல்லம்'' என்று பொறிக்கப்பட்டிருக்கும் பகுதிக்குள் நுழைகிறோம். அது ஒரு புனிதமான இடம். புனித ஆத்மாக்களின் புகழுடல்களின் புகலிடமென்பது அதற்குள் பிரவேசித்ததும் எம் உணர்வுகளுக்குப் புரிகிறது.

தேவகியின் புதைகுழி மண்ணால் நிரப்பப்பட்டுக் கிடந்தது. அவளது பூவுடலைப் போர்த்திருக்கும் மண்ணைக் குனிந்து நான் முத்தமிடுகிறேன். கண்கள் அந்த மண்ணின் மேல் கோலமிடுகின்றன. நாங்கள் கொண்டு சென்றமாலையை அதன் மேல் வைத்து அஞ்சலி செய்கிறோம்.

கண்ணீர் சொரிந்ததால் என் மனப்பழு குறைகிறது. மனதிலும் ஒரு தெளிவு பிறக்கிறது. நாங்கள் பூக்களை ஒவ்வொரு கல்லறைக்கும் வைத்து அஞ்சலி செலுத்த நெடு நேரம் பிறக்கிறது. வீடு திரும்பும் போது மூவருமே சிறிது தென்புடன் காணப் படுகிறோம்.

பொழுது சாயும் வேளை, தேவகியின் படத்தின் முன் குத்துவிளக்கை ஏற்றி வைக்கிறேன். என்ன! படத்தின் முன் ரேவதியின் சங்கிலி தெரிகிறது. அதன் கீழ் ஓர் கடிதம்.

முன்னர்...... தேவகி கூண்டை உடைத்துப் புறப்பட்ட நாள் நினைவில் வருகிறது. அதே போல...

நடுங்கும் கரங்களால் கடிதத்தைப் பிரிக்கிறேன்.

''அக்காவின் பணியைத் தொடர நான் புறப்படுகிறேன்''— ரேவதி.

நான் நினைத்தது நடந்து விட்டது. என் மன அலைகள் ஒருபோதும் ஓயப்போவதில்லை. ☐☐

''சோதனை மிகுந்த வரலாற்றுக்கட்டங்களில் எனக்குப்பக்கபலமாக, மனித மலைகளாக உறுதியோடுநின்ற மாவீரர்களை நான் என்றும் மறக்கமுடியாது. இந்த இலட்சிய வேங்கைகளின் தளராதஉறுதிதான், எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாகநிற்கின்றன.''

—தமிழீழத் தேசியத்தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலையின் பேரொளியாய் ஒளிரும் சுடர்கள்

☐

கருணாகரன்



மழை பெய்யத்தொடங்கிவிட்டது. எங்களுடைய ஊர்கள் பூரிக்கத் தொடங்கும் இந்நேரம். எல்லா இடமும் சிலிர்ப்பு மீந்திருக்கும். புல்லோ பூண்டோ இல்லைப் பயிரோ எதுவாக இருந்தாலும் இந்நாட்களில் உயிர்ப்பு நிறைந்து பூரித்திருக்கும். எங்கும் பச்சை. பச்சையின் அடியில் ஈரலிப்பு. உயிர்ப்பின் வேர்விடல், மண்ணின் உயிர்ப்பாக, இயற்கையின் வேர்விடலாக இந்தமாரிகாலம் வரும். இது வருசம் வருசம் வரும் வரம்.

ஆனால் இந்த வரம்; இந்த ஈரலிப்பு; இந்தச் சிலிர்ப்பு இன்றைக்கு இல்லை. மழைபொழிகிறது. கந்தகச் சூடேறிய மண் கொதிக்கிறது. வாழ்க்கையின் சவாலுக்காக சிந்திய இரத்தம் இந்த மழைநீருடன் கலந்து ஊறுகிறது; எங்கும் பரவுகிறது. பூமியின் அடி ஆழம்வரை; அதன் சுழற்சி மையம் வரை அந்தக் குருதியின் உயிர்ப்பலம் நீள்கிறது.

முன்னைய மழைநாட்களில், கார்த்திகைமாதத்தின் ஈரலிப்பில் எங்கள் வயல்களில் நெல் இடுப்புபரம் வளர்ந்த குழந்தை. காற்றில் சாய்ந்தாடும் அதன் வாழிப்பு. மனசு பூரிக்கும். நம்பிக்கை நிறைந்து வாழ்க்கை உவப்புடன் கைக்குள் பவுத்திரமாக இருக்கும். வாடையில் கடல் குமுறும். அதன் கொந்தளிப்பும், திமிறுதலும், மூசுதலும் வீரியமாய்...

எங்களுடைய மழைநாள் நெருப்பாகக் கொதிக்கிறது. மிகப்பெரிய பயங்கரத்திலிருந்து, சகிக்கமுடியாத அழிவிலிருந்து மீள வேண்டிய சவால் நமக்கு.

நமது வாழ்க்கை, அதன் சவால், எங்களுடைய வாழ்க்கையின் மையம், அதன் எதிர்பார்ப்பு எல்லாமே இந்தப் போராட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டத்துடன், இரத்தம் சிந்தும் புரட்சியுடன், அளவற்ற அர்ப்பணிப்புகளுடன்தான் என்றாகிவிட்டது.

இந்த அர்ப்பணிப்பு நமக்குப்புதியது. நம்பிக்கெடுதலும், ஏமாந்து போதலும், தனிலாபங்களில் மயங்கி விலைபேசுதல்; விட்டுக்கொடுத்தல் என்றிருந்த ஒரு முறைமையை இடித்துக்கொண்டு ஒரு வெடிப்பாக இந்த அர்ப்பணிப்புப் பிறந்துள்ளது.

கண்ணீர் ததும்பும் வாழ்க்கையையும், நிச்சயமற்ற தன்மையையும், இரண்டாம் மூன்றாம் தர கணிப்பின்கீழ் புறந்தள்ளப்படும் மனிதராக அலையும் அவலத்தையும் கண்டு சகிக்கமுடியாத எழுச்சியாக இந்த அர்ப்பணிப்பு உணர்வு முளைவிட்டது. பிரதேசம், சாதி, மதம், ஆண், பெண் என்ற பேதங்கள், பிரிவுகள் எல்லாவற்றையும் புறந்தள்ளி சுதந்திரதாகத்துடன் இது எழுச்சி கொண்டது. எங்களைச் சூழ்ந்த துயரங்கள், அழிவுகள், மீளமுடியாது என்றிருந்த நம்பிக்கையீனங்கள் எல்லாவற்றையும் இது வெற்றி கொண்டது. இவ்வாறான ஒவ்வொரு வெற்றியின் அடியிலும் மனசின் இழைகளோடு கலந்திருக்கும் நெகிழ்ச்சிக்குரிய கதைகள் .. பரிவு நிறைந்த உணர்வலைகள் ..... சுதந்திரதாகம் கொண்ட இதயங்கள்... எல்லாம் அர்ப்பணமாகியுள்ளன இது எங்கள் மண்ணின் மகிமையாகவுள்ளது.

அளவற்ற அர்ப்பணிப்பின் உணர்வாக விழிகள் துடிக்கின்றன. கண்ணீர் ஊற்றெடுக்கும் மையத்தில் நன்றி பெருக்கெடுக்கிறது. நிலவும் மௌனத்தில் அவர்களின் நினைவும், பரிவும் மேலெழுகிறது இந்த வாழ்க்கையை நமக்களித்த புதல்வர்கள் நீள்துயில் கொள்கிறார்கள். தங்கள் உயிரை முன்னிறுத்தி எங்கள் உயிரைக் காத்தவர்கள். தங்களின் ஆசைகள், பருவச் செய்

## தன்மான வீரர்கள்

□ சி. செழியன்

எத்தனையோ இன்னல்களை
இதயத்தில் சுமந்தீரே
எம் இனத்தின் இலட்சியத்தை
இயன்றவரை எமக்களித்தீர்
இறுதிவரை களம்குறித்து
உறுதியுடன் போர்தொடுத்து
தம்முயிரைப் பார்க்காது
தமிழ் மண்ணை மீட்கையிலே
உம் உயிரைத் தந்தீரே
தன்மான வீரர்களே.

நாளை விடியலுக்காய்
இன்று விதையானவர்களே
சூடான துப்பாக்கி ரவையை
சுகமாக ஏற்றவரே
தாயகத்தின் விடுதலைக்காய்
அயராது உழைத்ததனால்
இன்று ஓய்வெடுத்து உறங்குகின்றீர்
மாவீரர் பஞ்சணையில்
அன்று நீங்கள் சிந்திய குருதி
இன்று தமிழீழ எல்லையில்
அடிக்கல்லாய் விளங்கும்
இது உறுதி...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கைகள், தங்கள் சுயவாழ்க்கை எல்லாவற்றையும் விட்டு எல்லோரும் சகோதரர், எல்லோரும் பெற்றவர் என்று நினைத்தவர் உறங்குகிறார்கள். முகம் தெரிந்தும், தெரியாமல் இருந்தும் உறவாகிப் போன பிள்ளைகள்......

வாஞ்சையுடன் கரம்பற்றி எப்படி இருக்கிறாய் என்று கேட்ட நண்பன், ஒரு புன்னகையுடன் மட்டுமே எப்பொழுதும் சினேகமாயிருந்த அந்தப் பெயர் தெரியாத தோழன், எல்லாவற்றையும் துருவித்துருவிக் கேட்கும் குழந்தையான கெட்டிக்கார பெண் போராளி, உடம்பெல்லாம் சல்லடைபட்டு உயிர்பிழைத்தவன், எதிர்பாராது நிகழ்ந்த இராணுவச் சண்டையில் உயிரிழந்து போனவன்... என்றெல்லாம் நீளும் இந்தத் தொடர்ச்சி ..

வரிசை வரிசையாக சுதந்திரதின அணிவகுப்பாய்..... கல்லறைகள்...... அவை நிமிர்ந்து எல்லையற்ற பெருவெளியை, சுதந்திரத்தின் ஒளிப்பொட்டை யாசித்தபடி... ஒவ்வொன்றிலும் வெள்ளை மனசுகள்... எல்லாம் பொதுமையாய் ... சுதந்திரத்தின் பாடலை இசைத்தபடி .

எங்களுடைய தேசத்தின் குழந்தைகளாக, வீரத்தின் பிரகிருதிகளாக நின்றிருந்தவர் இன்றைக்கு நெடுஞ்சாண் கிடையில் உயிர்மூச்சிழந்து உறங்குகின்றார். ஒவ்வொரு கல்லறையும் ஒவ்வொரு கோபுரமாய்... ஒவ்வொரு கோபுரத்தின் முன்னும் மலர்க்குவியல்கள். அள்ளிவைத்த மலர்க்குவியல்களில் எவ்வளவு கண்ணீர்... எத்தனை நன்றி... எத்தகைய பரிவு?...

நீள்கிறது மௌனம். வளரும் உறுதியாய் வியாபிக்கிறது அமைதி. ஓங்கிய பனங்கூடலின் முற்றத்தில் எங்கள் வீரர்கள் தூங்குகிறார். சுதந்திரப்பாடலின் முழக்கம் அந்த மௌனத்தின் பேரொலியாகக் கேட்கிறது.

மலர்கள் ஏந்தி நன்றிமிக்கவர்கள் வருகிறார்கள். நினைவுகளில் உருகி, கண்ணீர் சிந்தி வெள்ளைமனசு வீரரின் காலடியில் நின்றழுகிறார்கள். ஒரு தந்தை. அருகே சிறு பிள்ளைகள். எதிர்காலத்தின் கனவாக இருந்த பிள்ளை, நிகழ்காலத்தின் நினைவாகிப் போய்விட்ட சோகத்துடன்...... அவரது கண்ணீரிலும் நம்பிக்கை மிஞ்சித் தெரிகிறது.

மழைபொழிந்து மண்சிலிர்க்கும் நவம்பரின் நாட்கள் எங்கள் வீரர்களுக்கானது. எங்களின் தேசம் விடுதலைபெறவேண்டுமென தங்கள் உயிரைத்தந்த மாவீரர்களுக்குரியது. மக்களின் முகங்களில்புன்னகை மலர்ந்திடவேண்டுமென்று தாங்கள் போரிட்டார்கள். நெஞ்சம்முழுவதும்தாயகக் கனவே அவர்களுக்கிருந்தது. விடுதலையின் வேட்கையுடன் துயரங்களை வென்றார்கள். சுதந்திர மூச்சுக்காக தாயை, தந்தையை, உறவை, தம் சுக துக்கங்களை, அவற்றின் ஈர்ப்பில் கட்டுண்டு போகாது விட்டுவிட்டு விசாலமான உறவை ஏற்படுத்திக்கொண்டார்கள். அவர்களின் செய்கைகள் எங்கள் தேசத்தின் உயிர் மூச்சானவை; எங்கள் வாழ்வின் அடி நாதமானவை.

எதிரியின் யுத்தத்துக்கான பிரகடனங்களையும் மீறி எங்கள் வீரர்களின் நினைவு மேலெழுகிறது. எங்கள் தேசத்தின் ஒவ்வொரு வீதியிலும், ஒவ்வொரு வாசலிலும், காணும் ஒவ்வொரு மனிதரிலும் மாவீரரின் நினைவுகளை ஏந்திய நன்றியின் அடையாளம் தெரிகிறது. வீதிகள் அலங்காரம் கொள்கின்றன. ஊரெல்லாம் பொதுப்பணி நடக்கிறது. பள்ளிகளில் மாண்டவீரரின் நினைவுப்பாடல் பாடப்படுகிறது. ஒவ்வொரு வீரரின் கதையும் ஊரெல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லாம் பேசப்படுகிறது. கண்ணீர்மல்கக் கதைகேட்ட பிள்ளைகள் அந்தவீரரின் கனவுடன் வருகின்றார்கள் அவர்பாதையில். வெற்றி நமக்கென்ற நம்பிக்கை பிறக்கிறது. எங்களின்தேசம் விடுதலைபெறுமென்ற கனவு பலிக்கிறது. ஒவ்வொரு மாவீரரும் ஏற்படுத்தியதாக்கம், தம் சாவின்போதும் எதிரியின் உயிர்நரம்பில் அவர்கள் கொடுத்த அடியின் உக்கிரம் இந்தநம்பிக்கையை எம்முள் விதைத்துள்ளது. யுத்தம் நம்முன் தன் கோர முகத்தைக் காட்டிக் கத்தும் இந்தநாட்களில், அதை எதிர்கொள்ளும் துணிவுபிறக்கிறது.

கார்த்திகை நாட்களில் எதிரியின் கனவு மிகப்பயங்கரமாயிருக்கும். அவனுடைய இரவுகள் பயங்கரமாக சலிப்புடன் நீளும். கிலியூட்டும் எண்ணங்கள் அவனை நடுங்க வைக்கும். பதுங்குகுழியே அவனது வாழ்விடமாக இருக்கும். என்ன செய்யமுடியும்? யுத்தம்பற்றியே எதிரி பேசிக்கொண்டிருக்கும் வரை நவம்பரின் நாட்களில் அவன் சாப்பிடமுடியாது; தூங்கமுடியாது. குந்தியிருக்கமுடியாது.

எங்கள் வீரர்களின் கனவுபலிக்கும் வரை—

எங்கள் அலை ஓயாது.

பிரிவின் ஆழ்ந்த துயரில் கண்ணீர் விட்டவர் நாம். சிந்திய கண்ணீரில் எங்களின் வாழ்க்கை இருந்தது. இறந்துபோன தோழர்களின் நினைவில் எங்களைப் பிணைத்துக்கொண்டு எழுகின்றோம்.

அந்த மாவீரர்களின் நினைவோடு நெய்விளக்கேற்றிச் சுதந்திரத்தை நினைக்கின்றோம். விடுதலையின் பேரொளியாக ஒளிரும் அந்தச் சுடர்களின் உயிரொளியில் எங்கள் மண் சிலிர்க்கிறது. காற்றில் எழும் நாதமணியொலியில் சுதந்திரத்தின் கீதம் இசையெனப் பரவுகிறது. விழிமூடித்தூங்குகின்ற வேங்கை வீரர்களே! எங்கள் தேசம் விடுதலை பெறும். உங்கள் கனவு நனவாகும் என்ற நினைவு மேலெழ தலைதாழ்த்தி அவர் பாதங்களை வணங்குகின்றோம். சிந்தும் கண்ணீரை அந்த வீரருக்குக் காணிக்கையாக்குகின்றோம்.

''வீரன்மண்ணில் புதையும் போது
விதையாய்த் தானிருப்பான்''

□□

''மாவீரர்களது அற்புதமான இலட்சியவாழ்க்கை, அவர்களது தியாகங்கள், அவர்கள் அனுபவித்த துன்பதுயரங்கள், ஏக்கங்கள், அவர்கள் கண்டகனவுகள் இவை எல்லாவற்றினதும் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே எமது போராட்டவரலாறு முன்னேறிச்செல்கிறது. எமது வீரசுதந்திரவரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் - வியர்வையால் — கண்ணீரால் எழுதப்பட்டது.''

—தமிழீழத் தேசியத்தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அறம் காக்க எண்ணவில்லையா?

□

முூ. வே. யோ. வாஞ்சிநாதன்

ஐம்பத்தி ஆறிலே
அக்காவைக் கொன்றனர்...
துன்பத்தில் விழுந்து
துடித்தோம்...
எழுபத்தி ஏழில்
அண்ணாவைக் கொன்றனர்...
கண்ணீர் மலைசிதறக்
கவலையில் நாம் மிதந்தோம்!
எண்பத்தி மூன்றில்
அம்மாவைக் கொல்ல
ஆயுதத்தோடு வந்தவர்...
அலறியடித்து...
ஓடத்தொடங்கினர்!

அடிக்க...அடிக்க...
அடிவாங்கிக்
கொண்டிருந்தோம் - இனித்
திருப்பி அடிப்பதெனும்
தீர்மானம் எடுத்தபின்பு...
துருப்பிடித்துக்
கிடக்குமோ எமது கை?
பழிக்குப் பழி...
எடுப்போம்!

அக்காவைக் கொன்றவனை...
அண்ணாவைக் கொன்றவனை...
எக்காலம் போனாலும்
உயிரோடு விடோம்...

'புக்காரா' குண்டைப்
பொழிந்தால் என்ன?
பூமியினைப் 'பவள்' வந்து
பிளந்தால் என்ன?
பீரங்கி எம்முடலைப்
பெயர்த்தால் என்ன?
தாயெங்கள் தமிழவளை...
நாயென்று எண்ணி



மிதிப்பவரை...
நார்...நாராய்க்
கிழித்தெறியும்
நாளவரையும்...
ஓயாதெம் கைகள்...
உறங்காதெம் விழிகள்...!

உறவுகளை எதிரியிடம்
கொடுத்தபின்னும் உங்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உணர்வு வரவில்லையெனில்
தங்குமிடம் ஒன்றில்
தரித்துக் கொள்ளுங்கள்...!
எங்கள் பயணத்தைத்
தடுக்காதீர்!
இது...
பிரபாகரன் என்னும்
பெருநெருப் பாற்றில்
இருந்து ..
பிறந்துவந்த பேரணி...
இல்லைப் போரணி...மண்ணில்
உரமாகும் உறுதியுடன்
இனமானம் காக்க ..
எண்ணுவோர் வாருங்கள்...!
சருகாகப் போகும் வயதில் ..
சாவுக்குப் பயந்தால்
சரித்திரம் படைப்பது யார்?
தளிரும் கொடியும்
தம் கையில்...
ஆயுதத்தை ஏந்துவதைக்
கண்டபின்பும் - உங்கள்
இதயக் கல்லில் இருந்து
ஈரம்...பிறக்காதா என்ன?
ஒருநாள்...
கரியாகப் போகும் கட்டை...
போர்க்களத்தில் விழுந்தால்
வரலாறு ஆகாதா?...
பின்னென்ன தயக்கம்?

இரவோடு இரவாக...
எம்மீது இன்னுமொரு
யாழ்தேவிக் 'கோச்'சைவிட - எதிரி
வீச்சோடு திட்டமிடும்
வேளையிலே...
போர்க்களத்தில் நீச்சலிட
ஏன் தயக்கம்?

அந்தப்புர நாயகனாய்த்
தினமிருந்து வாழ்ந்தால்...
அந்தப்புற நானூற்றைப்
படைப்பது யார்?...
கந்தப்பனே சூரனைத்தன்
சொந்தக்கை வேலெடுத்து...
நிந்தனைகள் செய்து...
வதைத்தகதை அறிந்தபின்னும்...
அறம்காக்க இன்னும் நீ
எண்ணவில்லை...
ஏன் தமிழா? □□

''எமதுமொழியும், கலையும், பண்பாடும் எமது நீண்டவரலாற்றின் விழுதுகளாக எமது மண்ணில் ஆழமாக வேரூன்றி நிற்பவை. எமது தேசியவாழ்வுக்கு ஆதாரமாக நிற்பவை. எமது பண்பாடுதான் எமது தேசத்தின் உயிர். எமது இனத்தின் ஆன்மா. எமது உடல்கள் அழிந்தாலும் உடைமைகள் அழிந்தாலும் எமது இனத்தின் இதயமாக இயங்கும் பண்பாட்டு வாழ்வை எவராலும் அழித்துவிட முடியாது.''

— தமிழீழத் தேசியத்தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உண்மை

□

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்



நச நச வென்று இருந்த பாதை ஊடாக ஒட்டோ இரைந்தபடி ஊர்ந்தது. அது தள்ளிய மண்ணெண்ணையின் கரும்புகையைக் குடித்தபடி ஒரு ஹொண்டா எம் டி நைன்டி.

அதில் அதன் உருவம் தெரியாத படி ஆட்கள். அவர்களைச் சுமக்கும் அந்த வண்டியை லாவகமாக ஓட்டிய படி கம்பீரமான ஒருவன், எல்லோரையும் தன் தலையில் சுமப்பது போல் பாவனையுடன். கூடவே அவர்களின் பொதிகள்.

எம் டி கக்கிய புகையைச் சுவைத்த படி சில சைக்கிள்கள். அவற்றிலும் சுமைகளும் ஆட்களும்.

கிளாலி படகுத்துறையை நோக்கிச் செல்லும் பாதையில் அவர்கள் படையெடுத்திருந்தனர். ஆனையிறவில் இருந்து 'யாழ்தேவி' புறப்பட்டதால் கிளாலிப் பாதை தடைப்பட்ட பின்னர் நடைபெறும் முதலாவது படகுப் பயணத்திற்காக அவர்கள் பயணித்திருந்தார்கள்.

□ □ □

புறப்படும்போது மெல்லியதாக மழை அடித்தது. பெய்வோமா? வேண்டாமா? எனச்சிந்தனை செய்து கடைசியில் 'யாழ்தேவி' போல அதுவும் பிசு பிசுத்து அடங்கிப் போய் விட்டது.

பதினொருமணிக்கு ஒட்டோ பயணப் பட ஆயத்தமாகி, தண்ணீர் இறைப்புக்குத் தயாராகும் 'வாட்டர்பம்' போல இறைக்கத் தொடங்கியது.

மாமாவும் மாமியும் கூடவே அவர்களையே அடைத்து வைக்கக் கூடிய வாறான அளவுகளில் சூட்கேசும்; அவைகளின் கற்பாறைச் சுமைகளாய் பொருட்கள்.

''இதென்ன கோதாரி'' எனச் சங்கர் முணுமுணுத்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''கிளாலிக் கடலில் இப்படி இரண்டு சூட்கேசை ஏத்தினால் காணும் போட் கவிழுறதுக்கு'' என்றான் சுரேஷ்.

மாமாவையும் மாமியையும் பயண மேத்த முதலில் சுரேஷ்தான் போவ தாக இருந்தது. அவன் தான் வீட்டுக் குப் பெரியவன்.

சங்கரை விட அப்பாவுக்கும் அம்மாவுக்கும் விருப்பமில்லை. என்றா லும் சங்கர் விடாக் கண்டனாக இருந் தான்.

சண்டை நடந்த இடத்தைப் பார்ப் பதில் சங்கருக்கு ஆர்வம் இருந்தது. எற்கனவே போர்க்காலக் கருத்தரங்கில் இடம்பெற்ற வீடியோக் காட்சியில் சண்டையின் சில காட்சிகளைப் பார்த் ததுதான் என்றாலும், அது நடந்த இடத்தைப் பார்ப்பது என்பது கள அனுபவம்தான்.

''மிதிவெடி கிடக்கும்; வெடிக்காத குண்டுகள் இருக்கும்''

-என அம்மாவும் அப்பாவும் செய்த ஆலாபனைகள் எல்லாம் தமிழீழப் பிரதேசத்தில் அறிவிக்கப்படும் ஊரடங் குச்சட்டம்போல கவனிக்காமலே போய்விட்டது.

''டேய் சுரேஷ், உவனை என் னடா செய்யிறது? ஒரு இடத்தில ஒரு நிமிஷம் சும்மா நிக்கமாட்டான். அங்கை போய் இறங்கி கொம்மானும் மாமியும் போட் ஏறும்வரை உவன் சும்மா இருப்பனே-'' என்று புலம்பிய அம்மாவைப் பார்த்து வேடிக்கையா கச் சிரித்தான் சங்கர்.

''ஆமிச்சென்றிக்கு கிட்டப்போய் பங்கர்வெட்டின எனக்கு எந்த நேரத் தில என்ன செய்யிறது எண்டு தெரி யும்'' என்றான் பதிலுக்கு.

அம்மாவின் முகம் இருண்டு கறுத் தது.

''நீங்களும் போட்டு வாங்கோ வன்-'' என்றாள், கணவரைப் பார்த்து.

அப்பாவுக்கு கிளாலியை நினைக் கவே பயமாக இருந்தது. வானத்தில் இரைவதைக் கேட்டவுடனே பதறு கின்ற மனுசன் அவர்.

☐ ☐ ☐

மாமாவும், மாமியும் சகலரிடமும் விடை பெற்றார்கள். யாழ்ப்பா ணத்தை விட்டுப்போவது அவர்களுக்குச் சந்தோஷமாய் இருந்தது. ஆனாலும் ஒருவகைப்பதட்டம் இருந்தது.

கிளாலிக்கடலைக் கடந்ததும் அந்தப் பதட்டமும் போய்விடும் என்பது சங்க ருக்குத் தெரியும்.

மாமாவும் மாமியும் கொஞ்சக் காலமாகவே யாழ்ப்பாணத்தை விட்டுப் போவதற்கு அதீத அக்கறை காட்டினார்கள். அதற்கான காரண காரியம் பெரிதாக ஒன்றும் இல்லை.

''என்ன இருக்கிறது எங்களுக்கு?'' என்று மாமி அடிக்கடி கேட்பார்.

'பாங்'கில் உள்ள காசையும் உடம்பில் சுமக்கும் நகைகளையும் விட வேறு என்ன இந்த மண்ணில் இருக்கிறது, என்பதுதான் அதன் அர்த் தம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குடியிருந்த இருபது பரப்பு வளவும் அதில் மாளிகை மாதிரி வீடு, வளவில் இருந்து நாலைந்து வளைவுகள் தாண்டிச் செல்லும் ஒழுங்கையூடாகப் போனால் வரும் தோட்டக் காணி எல்லாமே இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களாகிவிட்டன.

சூட்டுச் சத்தங்களும், விசில் அடித்தபடி வந்த 'ஷெல்' சத்தங்களையும் கேட்கத் தொடங்கிய பின்னர் போட்டிருந்த உடுப்புகளோடும், தயாராக வைக்கப்பட்டிருந்த நகைகளோடும் வீட்டை விட்டு ஓடிவந்த கதை உண்மை. பிறகு போக முடியவில்லை.

பிள்ளைகள் எல்லோரும் ஏற்கனவே வெளிநாடு போய் இருந்தனர். வீட்டையும் வளவுகளையும் சொத்துக்களையும் நாள் தவறாமல் சாப்பிட்டுக்கொண்டு மாமாவும் மாமியும் காவல் காத்து வந்தார்கள்.

இப்போது அதுவும் போய் விட்டது. பிறகு ஏன் இந்த மண்ணில் இருப்பான்? என்றுதான் மாமி கேட்டபடி இருந்தார்.

□ □ □

கிளாலிக்கு 'யாழ்தேவி' புறப்பட்டு கடற்பாதைக்குப் பிரச்சனைவர மாமி புராணம் பாடத்தொடங்கிவிட்டார். ''என்னெண்டு இனிப்போறது? அவன் மூத்தவன் எத்தினை கடிதம் போட்டிட்டான். கடவுளே இனி என்ன செய்யிறது?''

மாமா கச்சேரிக்கும் போய்வந்தார். கப்பலிலும் போகலாமா என்று சுழியோடிப்பார்த்தார்.

# மாவீரர்கள்

□

இ. திருமாறன்

சொந்தம் தனைத் துறந்து
தாயகம் மீட்க என்று
சேனை வந்திணைந்த சோதரர்கள்
செந்நெல் விளை புலங்கள்
சீர் வரிசை சீதனங்கள்
கண்ணிற்கு அழகான கன்னியரும்
கனடா மண் வரைக்கும்
கால் ஊன்றுதற்காய்
கடவுச் சீட்டுக்களும்
அள்ளிக் கொடுக்கின்ற
ஆட்கள் பல இருந்தும்
அனைத்தும் தள்ளி விட்டு
எம் அன்னை மண்ணதனின்
அடிமை விலங்குடைக்க
ஆகுதியாய் கலந்துவிட்ட
எம்மினத்தின் இளைஞர்களே
மாவீரர்கள்.

மெல்ல நடை பயின்று
மேனி எலாம் பூச்சூடி
கண்ணில் மைதீட்டி
கணவனும் காதலனும்
கண்கண்ட தெய்வமென
காலமெலாம் கால் தொழுது
காலை முதல் மாலைவரை
கடன்கள் பல முடித்து
வீட்டில் பொங்கிப் பெருக்குதலும்
பிள்ளை பெறுதலுமே
பெண்ணினத்தின் பெருமை என்ற
பொய்மை நிலை விடுத்து
தமிழீழ விடுதலைக்காய்
தம்முயிரை தான் கொடுத்த
தமிழ்த்தாயின் தங்கைகளே
மாவீரர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சாமான்கள் வராமல் செத்துப் போகும் லட்சக்கணக்கான சனங்களுடன் தாங்களும் சேர்ந்து விடுவோமோ எனப்பயந்திருக்கவேண்டும்.

யாழ்தேவி என்று வந்தவர்கள் அந்தக் காலத்து இன்டர்சிற்றி ரயிலாக திரும்பிப்போக ஒளாலிப் போக்குவரத்து மீண்டும் நடக்கும் என அறிவிப்பு வந்ததும் மாமாவும் மாமியும் தப்பினால் போதும் என்று ஆயத்தமாகிவிட்டார்கள்.

□ □ □

சேறாகிப்போன தெருவோரமாக தென்னைமரங்கள் தெரிந்தன. எரிந்து கருகிப்போன குடிசைகள், வெறியாட்டம் நடந்ததிற்கான ஆழப்பதிந்த சுவடுகளாகச் சாட்சிசொல்லின.

சேற்றுத் தரையை உழுதிருந்தது போல டாங்கிகளினதும் கவசவாகனங்களினதும் வரித்தடங்கள்.

ஷெல் வீச்சுகளுக்கும், விமானத் தாக்குதலுக்கும் சிதறியிருந்த மரங்களையும் கட்டிடங்களையும் தாண்டி வந்தால் மணல்வெளி எங்கும் உக்கிரமான போர் நடந்தமைக்கான முழுமையான அறிகுறிகள்.

மாமாவும் மாமியும் பதட்டத்துடன் அவற்றினைப் பார்த்தனர்.

''என்ரை அம்மாளே - என்ன கஸ்டப்பட்டு எண்டாலும் இண்டைக்கு போய்ச்சேந்திடவேணும்'' என்று மாமி முணுமுணுத்தாள்.

''உப்பிடித்தான் எல்லா இடமும் நடக்குமெண்டால் இஞ்சை இருந்து என்ன செய்யிறது?'' என்றார் மாமா பதிலுக்கு.

ஓட்டோவின் வேகம் குறைந்து ஊரத்தொடங்கியது. பாதையின் ஓரமாக தலைகளில் சுமையுடனும் களைத்துப்போன முகங்களுடனும் சனங்கள்.

''உதுகளும் போட்டுக்கே போகுதுகள்?'' என்று மாமா கேட்டார்.

''ஆர்?'' என்றான் சங்கர்.

''உதில போற சனங்கள் தான்?''

''உவை இஞ்சை குடியிருந்த சனங்கள். இப்ப திரும்ப குடியிருக்க வருகுதுகள்.''

''என்ன-இஞ்சையோ?'' என்றாள் மாமி வியப்புடன்.

''ஓமோம்?''

''மெய்யோ''

''நாலுதடியும் ஐஞ்சு ஓலையும் இருந்தால் ஒரு கொட்டில் போட்டிடுங்கள். பிறகு நிம்மதியான சீவியம்''

மாமிக்கு நம்புவது கஸ்டமாக இருந்தது.

''இந்தச் சனங்களுக்கு மாமி, சொந்தமாய் நிலமோ வீடோ கிடையாது. எண்டாலும் இந்த மண்ணில சீவிக்குதுகள்''

மாமி, சங்கரை விநோதமாகப் பார்த்தார்.

''இஞ்சை சொந்தமாய் ஒண்டும் இல்லாட்டியும் மாமி இது அதுகளின்டை சொந்தமண்.'' என்றான் சங்கர். □□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேகம் இறங்கிவரும்
இந்த மண்ணுக்குப் பன்னீர் தெளிக்கும்
நவம்பரில் ஒரு நள்ளிரவு
மணியொலிகள் எங்கும் இசைக்கும்
மனதில் கருணை ததும்ப
கண்களில் கண்ணீர் பெருக
கல்லறைக்கு முன்னால் மண்டியிடும் தாயே!
உன் மகன் சத்தியத்தை மதித்தான்
பாசறையில் சத்தியம் செய்தான்
எதிரிக்குப் பணியாமல் வெங்களம் சென்றான்
விடுதலை பூத்த இதயத்துடன்
இந்த மண்ணின் எல்லையில் நின்றான்
அம்மா!
என் பிரிய தோழனைப் பெற்றவளே
எதிரியின் கன்னத்தில் அறையும்வரை
அவனது துடிப்புகள்
வீரமாய்க் கொப்பளித்தன.
அவன் புலிதானம்மா
உன்மானம் காத்த மகன்,
ஊரெல்லாம் பேர்சொல்லும் அந்த மகன்,
நீவைத்த மலர்களின் அடியில் புன்னகைக்கிறான்.
நானும் தாயகத்து நினைவுநிறைந்த நெஞ்சுடன்
நடக்கின்றேன்...
பாதையில் பாரம் அதிகமானாலும்......
நடப்பேன்
விடுதலையின் புள்ளிவரை நடப்பேன்...

# விடுதலையின் புள்ளிவரை

□

சங்கீதன்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மதிப்பீட்டுரை

□

மொழியன் பூங்குன்றன்

தமிழ்த்தாய் வெளியீடு

## அதிர்ச்சிநோய் எமக்கல்ல!

### நாக.பத்மநாதனின் உருவகங்கள்

திரு. நாக பத்மநாதன் அவர்களுடைய 34 உருவகக் கதைகளைக் கொண்டதாகத் தமிழ்த்தாய் வெளியீடாக 'அதிர்ச்சி நோய்எமக்கல்ல'என்னும்தொகுதி நூல் வெளியிடப்பட்டுள்ளது. வழக்கத்துக்கு மாறாக, இக்கதைத் தொகுதிக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரை கவிதையிலேயே அமைந்துள்ளது. கவிஞர் புதுவை இரத்தினதுரை இவ்வாறு கவிதையிலே வழங்கிய சிறப்புரையில் திரு. நாக. பத்மநாதன் அவர்களைப் பின்வருமாறு அறிமுகஞ்செய்கிறார்.

எழுபது வயதிலும் இருபது வயது.
இளைஞனைப்போல
நினைவுதடுமாறாத ''கம்பீரம்'' ஒன்று
எங்களுடன் வாழ்கிறது.
ஒட்டி உறவாடக் கூடிய
விழுதெறிந்த விருட்சமொன்று
எமக்கு நிழலாக நின்று குடைபிடிக்கிறது.
நேரம் கிடைக்கும் போதிலெல்லாம்
நாங்கள் நிழல் தேடிச் செல்வோம்.
மனதுக்குள் இனிய மலர்கள்
இதழ் விரித்துக்கொள்ளும்
இந்த மரம் நிழல்மட்டும் தானா தரும்?
இல்லை.
அறிவுப் பழம் தந்தும் ஆதரிக்கும்.
யாரிவர்?
ஐயா, நாக. பத்மநாதன்.

இவ்வாறு அறிமுகமாகும் நூலாசிரியர் திரு. நாக. பத்மநாதன் ''தமிழுக்காகவும் தாய்மண்ணுக்கானதுமான போராட்ட ஓட்டக்களத்தில் புதிது புதிதாக'' தன் பாதப் பதிவுகளைப் பதித்தவராக, அவருடைய கதைகளூடாக வெளிவருவதை இத்தொகுதிக் கதைகளைப் படிப்பவர்கள் கண்டு கொள்வார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தன்னலமற்ற தியாகம் இவருடைய பல கதைகளின் ஊடுபாவாக அமைகின்றது. இதனாலேதான் "தமிழினத்தின் வாழ்வுக்காகத் தம்மை முகந்தெரியாத் தற்கொடையாக்கும் இளந்தளிர்களுக்கு..." இந்நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. தன்னலமற்ற தியாகத்தின் உருவகமாக "சிலுவை" என்னும் கதை அமைகின்றது. முள், சவுக்கு, ஆணி ஆகிய மூன்றும் இரண்டு மரக்கட்டைகளின் இணைப்பாக அமையும் சிலுவையைப் பார்த்துப் பொறாமைப்படுகின்றன. இறுதியில் "சிலுவையே, உன்னைத்தான் கேட்கிறோம். உன் பெருமைக்குக் காரணம் என்ன?" என்றே கேட்டுவிடுகின்றன. அதற்குச் சிலுவை கூறிய பதில்:

"எனக்கோ இயேசுநாதருடன் கூட இருந்தது மட்டுமல்ல, அந்த இரட்சகருடைய துன்பத்திலே பங்குபற்றும் பெருவாய்ப்பும் கிடைத்தது. அந்தத் திருமேனியிலே ஏறிய ஆணி என்மீதும்தான் ஆழமாய் ஏறி நின்றது".

என்று கூறிய மறுமொழி எவ்வளவு ஆழமான பொருளுடையது என்பதை நாம் உணரக்கூடியதாயுள்ளது.

சிறியதாயிருந்தாலும் சுயாதீனமாயிருக்கவேண்டுமென்ற கருத்தினை அடிப்படையாகக்கொண்டனவாக "கழுதையல்ல கட்டெறும்பு", "தெளிவு" என்னுங் கதைகள் அமைகின்றன. எடுத்துக்காட்டாக முதற்கதையை நோக்குவோம்.

"கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆகியது" என்று காற்றுக் கூறியதாம். "என்னெடா பாடுகிறாய்?" என்று அதட்டலுடன் கேட்டதாம் கட்டெறும்பு. சிந்திக்கத் தொடங்கிய காற்று, கழுதையைப் பார்த்தது. "அதன் முதுகில் ஒரு பாரச்சுமை. எசமான் வாளியில் கொண்டுவந்த கஞ்சியை வைத்தான். அதனைத் தலைகுனிந்தபடி கழுதை குடித்தது. அவன் வா என்று கூறிய வழியே அது பின்சென்றது." கழுதையை ஏளனத்துடன் காற்றுப் பார்த்துக்கொண்டிருக்க, "கழுதை வேறு கட்டெறும்பாகிய நாங்கள் வேறடா! எம்மை எவரும் பிடிக்க முடியாது. வைத்து வளர்க்க முடியாது. அடிமைப்படுத்தவும் முடியாது" என்ற எறும்பின் பலத்த குரல் ஒலித்ததாம். திரு. நாக. பத்மநாதனுடைய உருவகம் எதனைப் புலப்படுத்துகின்றது என்பதனை இங்கு விளக்கிக்கூறவேண்டிய அவசியமே இல்லை என நம்புகிறேன். உருவகக்கதைக் கலையிலே அவர் கைதேர்ந்தவர் என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

இயற்கையினை, சமகாலச் சமூக, பண்பாட்டுச் சிக்கல்களை, மனிதர்களுடைய மன உணர்வுகளை நுணுகி நோக்கும் பார்வையினை உடையவராக ஆசிரியர் திகழ்கிறார். "சக்கைலொறி சீதனத்திற்கு", "மண்ணின் குரல்", "அதிர்ச்சிநோய் எமக்கல்ல" என்னும் கதைகளை வகைமாதிரிக்காக, எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம். சுருங்கியசொற்களிலே ஆழமான உணர்வினைத் தட்டியெழுப்பும் கருத்துக்களைக் கலைவடிவங்களாக்கித் தருகின்றார். பெரிய தேர் ஒன்றிலே சிறியன சிறியனவாகச் செதுக்கப்பட்ட சிற்பங்களைப்போல இவருடைய கதைகள் அமைகின்றன.

உருவகக் கவிதைகள் பண்டைக்காலந் தொடக்கமே தமிழில் வெளிவந்துள்ளன. இக்கவிதைகளின் நவீன வடிவங்களே உருவகக் கதைகள். "வலியார்முன் தன்னை நினைக்க; தான் தன்னின் மெலியார் மேல் செல்லும் இடத்து" என்னும் குறள் பாவின் உரைவடிவமாக "பட்டறிவு" என்னும் உருவகக் கதை அமைவதை வகைமாதிரியாகக் காட்டலாம். பெரிய மீன் ஒன்று வர, கடலின் அடித்தளத்தில் கற்பாறைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குள் சென்ற ஒரு சிறு மீனின் திறந்த வாய்க்குள் வந்த குஞ்சு மீனை அச்சிறு மீன் உண்ணாமல் தப்ப விடுவதாக ''பட்டறிவு'' என்னும் கதை அமைகின்றது. திரு. நாக. பத்மநாதனின் உரைவடிவம் சில இடங்களிற் கவிதை வடிவமாகவே அமைந்து விடுகின்றது. 'மனக்கிருமி'' என்னும் அவருடைய கதை பின்வருமாறு தொடங்குகின்றது:

''மறைந்து மறைந்து ஒரு பெருந்தீமை ஓடிக்கொண்டிருக்கும், அதன் தாக்கத்தால் அடிபடும் அவல உயிர்களின் குரல்கள் கேட்கும்; அதற்கு மேலாக அந்தக் கொடுமையின் கனைப்பும் இடையிடையே காதுக்கு எட்டும். ஏதோ பாழ்போல இது ஆகி வருகிறதா?''

பேச்சோசைச் சீர் ஒழுங்கிலே இத்தொடர்களை ஒழுங்குபடுத்தியமைத்தால், ஓர் உருவகக்கவிதைக் கதையின் முதல் பகுதியாக அது அமைந்துவிடும்.

எளிமையான அழகான தமிழ் நடையிலே எல்லாக்கதைகளும் அமைந்துள்ளன. தமிழ் உருவகக்கதை வரலாற்றிலே இந் நூலுக்குச் சிறப்பான இடம் உண்டு என்பதில் ஐயமில்லை.

''வெளிச்சம்''
கலை, இலக்கிய சமூக இதழ்

ஓவியம்:
நயா

உருவாக்கம்:
ஆசிரியர் குழு

அச்சு:
ம. மரியதாஸ்

இதழ் அமைப்பு:
இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

வெளியீடு:
விடுதலைப்புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தூரப் பறந்துவிட்ட துணிவுப் பறவைகளே

□

புதுவை இரத்தினதுரை



நேற்றுவரை நீங்கள் நேரிருந்தீர்
கண்களிலே...
பூத்ததுபோல் பூத்துப் புன்னகைத்தீர்.
எங்களுடன்
பேசிக்களித்தீர்; போய்விட்டீர்.
தாயகத்தில்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வீசிவரும் காற்றில் விரித்த சிறகெடுத்துத்
தூரப் பறந்துவிட்ட துணிவுப் பறவைகளே!
ஈரவிழியிங்கு எமக்கின்னும் காயவில்லை.
ஊரறியோம்.
உங்கள் உறவறியோம்
தந்தையிட்ட பேரறியோம்
ஆனாலும் புகழறிந்து நிற்கின்றோம்.
நெஞ்சினிலே உங்கள் நினைவுக்கு மாலையிட்டு
நஞ்சணிந்தோம்.
நீங்கள் நடந்தவழி நடக்கின்றோம்.
தம்பியென்றும்
அண்ணன் தங்கையென்றும்
எங்களுக்கோர்
வம்சவழி தோன்ற வாழ்ந்தோமே.
ஒன்றாகி
வந்தபகை வீழ்த்த வரிசையிட்டுப் போனோமே.
செங்குருதி பாய்ந்து திசை சிவந்து
எதிரிகளின்
தங்ககங்கள் யாவும் தணலில் கருக்கியபின்
வென்றகளிப்பில் வீடு வந்தோம்
அன்றிருந்து
இன்றுவரை உம்மை எவ்விடத்தும் காணவில்லை.
கல்லறைக்குள் நீங்கள் கண்மூடித் தூங்குவதாய்
சொல்லுகிறார்
உங்கள் தேகம் தூங்காதே!
மொட்டவிழும் பூவினிலே முகம் தெரியும்
கல்லறைக்குக்
கிட்டவர உங்கள் கண்தெரியும்
வீசுகின்ற
காற்றினிலும் மூச்சுக் கலந்து
எம்மை உயிர்ப்பிக்கும்.
இனிக்
கூற்றெனவே வரும்பகையைக்
குடிப்போம்
வென்றிடுவோம்! □□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஐம்பதிலும் ஆசை வரும்

தேவரண்ணா

எனக்கு இந்தவயசிலை இப்பிடி ஒருஆசை வந்திருக்கப்படாது ..! ஆனா வந்திட்டுது..... என்னசெய்யிறது...?

எனக்குத்தெரிஞ்ச பொடி பொட்டைள் நெடுக நக்கல் அடிக்கிறதுகள் .. தாண்டிக் குளத்தைத்தாண்டி 'டை' வராமல் தடுக்கவேணுமெண்டு சொல்லி...

ஐம்பது வயது தாண்டியும் எனக்கு இன்னமும் தலை நரைக்காதபடியால், நான் தலைக்கு 'டை'அடிக்கிறன் எண்டு சொல்லி அவையளின்ரை கணிப்பு.

நான் இங்கை வேலைக்குப் போகேக்கை வரேக்கை பொம்பிளைப்பிள்ளையள் சைக்கிளுகளிலையும், வாகனங்களிலையும் போய் வாறதுகளைப் பார்க்கேக்கை இடைக்கிடை எலக்கு இந்த ஆசை வாறதுதான்...... ஆனால் என்ரை வயசையும் குடும்ப நிலையையும் யோசிச்சு என்னைக் கட்டுப்படுத்திக்கொண்டுதான் வந்தனான் ... ஆனா இப்ப என்னாலை என்னைக் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு...

இந்த வபசிலை எனக்கு இந்த ஆசை வந்திருக்குது எண்டதை, என்ரை மனுசி கேள்விப்பட்டுதெண்டா, வீட்டிலை பெரிய பூகம்பமேஎழும்பும்...

"நான் மலைபோல வீட்டில ஒருத்தி இருக்கிறன்... அவங்கள் பொடியள் ரெண்டுபேர் வெளியிலை... குமர் ஒண்டு வீட்டிலை இருக்குது .. அந்தக் குமரைக் கரைசேர்க்கிறதுக்கு ஒருவழி பார்ப்பம் எண்டில்லாமல், இந்த மனுசனுக்கு இந்த வயசிலை இப்பிடிஒரு ஆசையோ" எண்டு சொல்லி, என்ரை தர்மபத்தினி துள்ளி மிதிப்பா எண்டதும் எனக்குத் தெரியும்.

அதுக்கு நான் என்ன செய்யமுடியும்?...... இந்த வயசிலை வரக்கூடாத ஆசைதான்...! ஆனா வந்திட்டுதே...!

'கல்லெண்டாலும் கணவன், புல்லெண்டாலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புருசன்' எண்டு நினைக்கிற என்ரைமனுசியை ஒரு மாதிரிச் சரிப்பண்ணினாலும், ஊரிலை உலகத்தில இருக்கிறதுகள்...... இனசனம் சும்மா இருக்குமே...... அதுகள் தேவையில்லாத கதையெல்லாம்சொல்லி, மனுசியின்ரைமனசைக் குழப்பிப் போடுங்கள்.

வெளிநாட்டிலை இருக்கிற பொடிப்பிள்ளையள், ''அப்பா இந்த வயசிலை உங்களுக்கு இப்பிடியும் ஒரு ஆசை வரவேணுமோ...' எண்டு சிலவேளை கடிதத்திலை எழுதிக் கேட்கக் கூடும்.

''நீங்கள் அந்தந்தக் காலங்களிலை சரியா நடந்திருந்தா எனக்கு ஏன் இந்த வயசிலை இப்பிடி ஒரு ஆசை வரப்போகுது......'' எண்டு சொல்லி அவையளின்ரை மூஞ்சையிலை அடிச்சமாதிரி பதில் எழுதிப்போட வேண்டியதுதான் .. ஓ ..!

சிலவேளை நான் செய்யப்போற இந்தக் காரியத்தாலை வீட்டில இருக்கிற குமரைக் கரைசேர்க்கிறதிலை ஏதும் கஷ்டம் வந்திடுமோ...?

சே... என்ரை ஆசைக்கு நான் அதைச் செய்யிறதுக்கும் என்ரை குமர் கரை சேர்றதுக்கும் என்ன சம்பந்தம்?

அயலட்டையிலை உள்ளதுகள் அல்லது சொந்தக்காரர், மனுசியின்ரை மனசைக் குழப்பி, மனுசி ஏதும் துள்ளியடிச்சாளெண்டால்...?

''ஓ... மனுசிக்கு இப்பிடிச் சொல்லவேண்டியதுதான்... இஞ்சை பாரடியப்பா... நான் சொல்றதைக் கொஞ்சம் பொறுமையாக் கேள்... அவை இவை சொல்லுறதைக்கேட்டு சும்மா மனசைப்போட்டுக் குழப்பாதை... எல்லாம் எங்கடை தலைவிதிப்படிதான் நடக்கும். இந்த வயசிலை எனக்கு இப்பிடி ஒரு ஆசை வரவேணுமெண்டு எங்கடை தலையிலை எழுதி இருக்கு. அவன் அண்டு எழுதினதை அழிச்சுஎழுத ஏலாது ..

நான் என்ரை ஆசைப்படி நடந்தாலும் இரண்டொரு கிழமையிலை ஆகக்கூடியது ஒருமாசத்திலை வீட்டை வந்திடுவன்...... பிறகு உங்களோடைஇங்கை தான் இருப்பன். இடைக்கிடை கட்டாயமா தேவைப்படுற நேரங்களிலை மாத்திரம் போயிட்டு வருவன், கோவியாதையடி நாச்சியார்'' எண்டு சொல்லி அவளின்ரை சொத்தையைத் தடவி ஒரு மாதிரிச் சமாளிக்க வேண்டியது தான்.

நான் இதைச் சொல்லிக்கொண்டு வரேக்கை கேட்டுக்கொண்டிருக்கிற உங்களுக்கும் என்னை அடிச்சுக்கொல்ல வேணும்போல நினைப்பு வரும் .. ஓ...!

''நைன்ரிக்கு இந்த வயசிலை இப்பிடியும் ஒரு ஆசையோ .....?'' எண்டு சொல்லி நீங்களும் வாய்க்கு வந்த மாதிரி திட்டித் தீர்ப்பியள்...

உதுதான் சொல்லிறது .. இந்த முந்திரிகைக் கொட்டை மாதிரி முந்தக்கூடாது எண்டு சொல்லி...

இந்த வயசிலை எனக்கு அந்த ஆசை வந்திட்டுது எண்ட உடனை என்ரை மனுசி பிள்ளையள், ஊர் உலகத்திலை உள்ளவை மாதிரி நீங்களும் என்னைப் பற்றி வித்தியாசமாத்தான் யோசிச்சிருப்பியள்... என்ன?

எதையுமே நல்லமாதிரி யோசிக்கமாட்டியளே.......! உடனை உங்கடமூளையெல்லாம் தலைகீழா வேலைசெய்ய ஆரம்பிச்சிடும்...

வெளிநாட்டிலை இருக்கிற என்ரைபொடியளிலை ஒருத்தன்தன்னும் இங்கை நிண்டு நல்லமாதிரி நடந்திருந்தானெண்டால்...... ...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனக்கு இந்த வயசிலை இப்பிடிஒருஆசையே வந்திருக்கத்தேவையில்லை...

ஆனா ஒண்டு சொல்லுறன்... இண்டைக்கு இந்த நாட்டிலை, எங்கடை தமிழீழமண்ணிலை வாழுற எல்லாருக்குமே இந்தஆசை கண்டிப்பாவரவேணும்.

குறிப்பாகச்சொன்னா, எங்கடைகுடாநாட்டிலை இருக்கிற பொடிபொட்டையளுக்கு இந்தஆசை தானா வரவேணும்...

சும்மா நடந்து கொண்டு... சந்திக்குச்சந்தி நிண்டுகொண்டு, போறது வாறதுகளோடை சேட்டை விட்டுக்கொண்டு நிக்காமல்...

அவங்கள் எங்கையோ இருந்து... எத்தனையோ மைலுக்கங்காலை இருந்து தங்கடைபகுதிகளை விட்டு இங்கைவந்து எங்களோடை சேட்டைவிட்டுக் கொண்டு நிக்கிறாங்கள்...

எங்களை அழிக்க எண்டு வந்து நிக்கிறாங்கள்.

ஆயிரம் ஆயிரமா வந்து குவிஞ்சு நிக்கிறாங்கள்.

ஆயுதங்களோடை வந்து நிக்கிறாங்கள்.

புக்காரா எண்டும், சுப்பர்சொனிக் எண்டும், சியாமாசெட்டி எண்டும் சொல்லி, குடாநாட்டை குண்டுபோட்டு அழிக்கிறதுக்கு விமானங்களோடை வந்து காத்து நிக்கிறாங்கள்.

நாங்கள் ஓடுறதுக்கு றெடியா நிக்கிறம்.

அவன் கிளாலிக்குவந்திட்டான் எண்ட உடனை "இனி என்ன நாங்களும் வெளிக்கிட வேண்டியதுதான் சண்டைக்கு" எண்டு சொல்லி கனபேர் சொன்னவை.

அவன் ஆனையிறவுக்குத்திரும்பியிட்டான் எண்ட உடனை, சொன்னவையளின்ரை வாயள் தங்கடை தங்கடைபாட்டிலை மூடிட்டுது.

"கடைசிக்கட்டம் எண்டால் விடவே போறம்.... ஒரு கை பார்ப்பம்தானை" எண்டு இப்பவும் சிலர் முணுமுணுக்கிறது என்ரை காதிலையும் சாடையா விழுகிது.

இப்பநடந்த போர்க்காலக் கருத்தரங்குகளிலை இயக்கத்திலை உள்ளவை கேட்டமாதிரி அவன்உடைச்சுக்கொண்டு உள்ளுக்கை பூந்தபிறகு மண்வெட்டிப்பிடியளோடையும், மரவள்ளித்தடியளோடையுமே சண்டைபிடிக்கப்போறது?

வெள்ளம் வாறதுக்கு முந்தி அணைகட்டவேணும்

அதுக்குத்தான் அவையள் சொல்லுகினம், "வாருங்கோ, பயிற்சி எடுங்கோ" எண்டு சொல்லி......

குடாநாட்டிலை வீட்டுக்கு ஒரு பொடியனோ, ஒரு பெட்டையோ வெளிக்கிட்டு வருங்களெண்டால், உண்மையா வந்து சுத்திவளைச்சு நிக்கிறவன் பார்த்துப் பார்த்து ஓடமாட்டானே... ஆ...!

கொழும்பிலை நிண்டு கொண்டு அந்த நைன்ரி சொல்லுது... "தீர்வுத்திட்டம் எண்ட பேச்சுக்கே இடமில்லையாம்; அவர் மருந்து வைச்சிருக்கிறாராம் எங்களுக்குத் தாறதுக்கு..."

ஏதாவது ஒரு வழியிலை சமாதானத்துக்கு வருவாங்கள், வருவாங்கள் எண்டு இவ்வளவு காலமும் நாங்களும் சும்மா இருந்திட்டம்...

இனியும் சும்மா நாங்கள் விடுப்புப்பார்த்துக் கொண்டு இருந்தமெண்டால், எல்லாருமே அழிய வேண்டியதுதான்... ஓ.....

பொடிபொட்டையள் வெளிக்கிடட்டும்... புலிப்படைக்கு ...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாங்கள் நைன்ரியளும் வெளிக்கிடுவம் துணைப் படைக்கு...

அங்கை வவுனியா விலை... மணலாற்றிலை... அலம்பில்லை... முல்லைத் தீவுப் பக்கங்களிலை எல்லாம், அறுபது எழுபது வயது நைன்ரியளும் தோளிலை துவக்குகளை மாட்டிக்கொண்டுதான் திரியுதுகளாம்...

நாங்கள் மட்டும் என்னத்துக்கு பார்த்துக் கொண்டு கிடப்பான்?

இப்ப இங்கையும் துணைப்படைக்கும் நூற்றுக் கணக்கிலை ஆட்கள்சேர்ந்து பயிற்சிகளும் குடுக்கத் தொடங்கிவிட்டினமாம்.....

இனியும் என்ன பார்த்துக்கொண்டிருக்கிறது?...

வாருங்கோவன் வெளிக் கிடுவம்.

தம்பியவை... பொடிச்சியள்.... இப்ப சொல்லுங்கோ... இந்த நைன்ரிக்கு இந்த வயசிலை இப்பிடி ஒரு ஆசை வரவேணுமோ? வேண்டாமோ? எண்டு சொல்லி... ஆ...!

## வரலாறு படைக்கின்றோம்

ச. வே. பஞ்சாட்சரம்

மாசரம் கொண்டமன மாவீர மாநிதியே
நீ அன்றும் தாய்வயிற்றுள் நிகழ்வித்த உதைகளினால்
பூவிழிகள் இரண்டினிலே பொங்கும் இன்பக் கனவுகளே!
சாவின்பின் நெஞ்சுகளில் தரும் உன்கால் உதைகளெனில்
ஆ!கோடி கண்களிலே ஆறுகளைப் பெருக்கினவே!
உன்றன் அடிச் சுவடுகளின் ஒளிக்கதிர்கள் என்றாலோ
அன்றைமுனி புங்கவரின் அடிச்சுவடு மறைந்தனவே!
என்றும் நீ வாழ்ந்திடுவாய் இன்னல்படக் கூடாது
என்றன்றோ ஈன்றவளே உனைத்திருத்த அடித்தழுவாள்
சென்றிடுவாய் இடையிலென்றால் தீண்டியிராள் உன்னைஅன்று
ஒன்றொன்றாய் எண்ணியிவை உயிர்கரைந்து வேகின்றாள்!
இருக்கும்பிள்ளை யைநினைத்து இறந்திடவும் முடியாமல்
மரித்தபிள்ளையை மறந்து வாழ்ந்திடவும் முடியாமல்
உருக்கு உலையாய் மாறியுளம் உருத்தெழுந்து நிற்கிறது!
எரிக்க அன்று மதுரையினை எழுந்தகனல் மூள்கிறது
புரட்சி அனல் நெஞ்செல்லாம் புகைகிறது! எதிரிஅந்த
நெருப்பினொடு விளையாடி நீறாதல் நிச்சயமே!
மண்நிறைக்குப் பொன்நிறுத்து ஓர்வரலாறு எழுகிறது
உண்ண, ஒரு முழுஇரவு உறங்க நேரமின்றி விழுப்
புண்ணடைந்து புண்ணடைந்து போர்க்களங்கள் பலகலக்கி
பண்ணிய உன் சாதனைகள் பழுதாக விடமாட்டோம்
கடப்பினிலே எதிரியவன் கால்முறிக்கத் தவறிவிட்டோம்
அடுப்படியில் வைத்தேனும் அடித்தோட்டத் திரண்டுள்ளோம்
வெடிக்கும் ஒரு புரட்சிமிக விரைவில்! உங்கள் தற்கொடைகள்
எடுக்குமடா இறுதிவெற்றி ஈழமென்ற பெயரினிலே!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தற்கொடுத்த மாவீரர் வழியில் வாடா!

□

வீ. பரந்தாமன்

தாய்மொழியைத் தாய்நாட்டை இனத்தைக் காக்கும்
சமர்வந்த தென்றஞ்சி மண்ணை விட்டுப்
பேய்களென ஓடியப்பால் போன மாந்தர்
பிறர்நாட்டில் அடிமைகளாய்த் தொழும்பு செய்வார்
நாய்களெனத் தாயைவிற்றுப் பகைவர் காலை
நக்கியுண்கின் றார்களுந்தா முண்டு கண்டீர்
சீயிதுவும் வாழ்வாவென் றெழுந்து சீறிச்
செருக்களத்தில் உயிர்விட்டார் யாவர் என்போம்?

வாசலிலே முகங்காட்ட அஞ்சி னாரும்
மாற்றார்கள் எம்மண்ணில் நின்ற நாளில்
தூசெழுந்து மூக்கினிலே புகுந்து விட்டால்
தும்முதற்கே அஞ்சினரும் வல்லி ருட்டில்
வீசுகின்ற ஒளியஞ்சி விளக்கேற் றாமல்
விழுந்தெழுவா ரையுந்தாம் கண்டோம் அந்நாள்
மாசிதுதான் தமிழர்க்கென் றெழுந்து பொங்கி
மறப்போரில் உயிர்தந்தார் யாவர் என்போம்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சோறாக்க வழிகிடைத்தாற் போது மென்பார்
தொலைக்காட்சி பார்த்தலின்ப மென்பார் மற்றுஞ்
சீராகத் திருவிழவு கலைவி ழாக்கள்
திருமணங்கொண் டாட்டங்கள் செய்தல் தானே
போராட்ட காலத்தில் நிமிர்ந்த வாழ்வு
புரட்சியென்பார் எறிகுண்டாற் குருதி சிந்திச்
சேறாகிக் கிடக்கின்ற மண்ணை யெண்ணி
செருக்களத்தில் உயிர்தந்தார் யாவர் என்போம்?

செத்தோர்கள் ஊறுற்றோர் இல்லி ழந்தும்
திருவிழந்தும் ஏதிலிய ரானோர் மற்றுப்
பித்தாகி அலைவோர்கள் பிறரா வர்நாம்
பிழைத்திருப்போம் பல்லறிவும் திறனும் நன்கு
கற்றோராய்ப் பெருமைகொள்வோம் என்ப ராகிக்
கல்விமன்றிற் போய்வருவார் உண்டே இந்நாள்
பற்றோடு பிறர்துன்பங் கண்டி ரங்கிப்
படுகளத்தில் உயிர்தந்தார் யாவர் என்போம்?

தாய்மண்ணின் அவலங்கள் கண்டு நாணார்,
தந்நலமே கருதியிங்கு வாழ்வார், எந்தப்
பேய்கொண்டு தந்தாலும் வாங்கி யுண்பார்,
பிறருழைப்பில் நயங்காண்பார், நாட்டைக் காக்க
பாய்கின்ற புலிமறவர் வீழ்ச்சி கண்டும்
பதறார்கள்; கொடியோர்கள்; மான மில்லார்!
தீயன்ன இவர்க்குந்தாம் வாழ்வு வேண்டிச்
செருக்களத்தில் உயிர்தந்தார் யாவர் என்போம்?

புறமிட்டான் மகனெனிலென் முலைய றுத்துப்
புறமெறிவேன் எனச்சினந்தாள் ஒருத்தி! மேனாள்
பொருதிட்டு நற்றந்தை சாவ, நேற்றைப்
போரினிலே கொழுநன்றான் மாள, இன்றும்
செருவுற்ற தென்றறிந்து சேயைக் கூவி
செல்லுகநீ களத்தென்றாள் ஒருத்தி இந்த
மறமுற்ற தமிழ்மாதர் மரபில் தோன்றி
மண்மீட்க மாண்டவர்மா வீரர் தாமே!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மொழிகட்கெல் லாமுந்திப் பிறந்தாள்; தாயாய்
முதன்மையுற்றாள்; ஒப்பற்ற வடிவெ டுத்தாள்;
எழிலுற்ற திருக்குறள்தொல் காப்பி யத்தை
எவ்வுலகும் போற்றிடத்தா னெமக்கே யீந்தாள்!
பழியுற்று வாழ்வாயோ தமிழா? ஈன்ற
பைந்தமிழாள் வாடுமடா களத்தில் வாடா!
விழியன்ன இவள்தழைக்க தற்கொ டுத்த
வெற்றிமிகு மாவீரர் வழியில் வாடா!

பெண்ணென்றும் ஆணென்றும் பார்ப்ப தில்லை;
பிள்ளையென்றும் பெரியரென்றும் பார்ப்ப தில்லை;
திண்ணென்ற வலிபடைத்தோர் மான முள்ளோர்
திரண்டெழுந்தாற் சிங்களமா வெல்லும்? இல்லை
குன்றொன்று நின்றன்ன தலைவன் நின்றான்
கூற்றுவனே வரின்வரட்டும் தமிழா வாடா!
மண்தன்னை மீட்கமொழி காக்க மாண்ட
மாவீரர் திருவடிக்கே சென்னி சேர்ப்பாம்! □□

## இது வீரர்களின் வீடு

□

அமரேசன்

இனத்தின் விடுதலை எழுந்தது நெஞ்சில்
என்றும் தாகமாய் வளர்ந்தது சுதந்திரம்
துணிவு பிறந்தது
வீரம் மிகுந்தது
வெற்றி வெற்றியெனப் புலிப்படை வளர்ந்தது.

நெஞ்சில் நிறைந்தது தியாகம்
நினைவில் நிறைந்தது லட்சியம்
மக்களின் வாழ்வே
மனதினில் ஆனது
களம்பல ஆடியே புலிப்படை வென்றது.

கல்லறைகளில் கதைகள் நிறைந்திருக்கு
காவியவீரரின் கனவுகள் மலர்ந்திருக்கு
தலைவன் நினைவும்
தமிழீழக் கனவும்
நெஞ்சில்மூள நெருப்பாய் ஆனார்கள்.

கண்வழி பெருகும் கண்ணீர் மாலையில்
காணிக்கை மலரினைத் தூவுவோம்
மலரும் ஈழம்
புலரும் நாளை
மாவீரரின் தாளடியில் வைத்து வணங்குவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தீ தீ

சாவித்திரி அத்துவிதானந்தன்



இரவு பத்துமணிக்குமேல் கேட்கத் தொடங்கிய குண்டுச் சத்தங்களும் வெடிச்சத்தங்களும் விடிந்த பிறகும் ஓய்ந்தபாடில்லை. வழமையான காலை நேரத்துப் பரபரப்பு எதுவுமின்றிப் பத்தமேனிப்பிரதேசம் அன்று ஓய்ந்துபோய்க்கிடக்கிறது. வெடிச்சத்தங்கள் கேட்டவுடன் இரவோடிரவாக சனங்கள் வெளியேறி அயல்ஊர்களுக்குப் போய்விட்டிருந்தார்கள். இப்படி இடம்பெயர்வது இப்போதெல்லாம் வழமையாகிப் போன விஷயம். மீண்டும் இரண்டொரு நாட்களில் அத்தனைபேரும் சொந்த இடத்துக்குத்திரும்பிப் போய் விடுவார்கள்.

முகாம்களில் முடங்கிக்கிடக்கும் சிங்கள இராணுவம் அவ்வப்போது நரவேட்டையாடப் புறப்படும் நாட்களில், மக்களின் இந்த இடம்பெயர்வும், தொடர்ந்துவரும் நாட்களில் மீண்டும் திரும்புதலும் நிகழும்.

இந்த இடம்பெயர்தலுக்கும், மீண்டும் திரும்புதல் நடவடிக்கைக்கும் செல்வம் என்றுமே விதிவிலக்கு.

அவள் ஒரு தனிக்கட்டை. அதுதான் காரணமோ?

'எல்லோருமே இடம்பெயர்ந்து போய்விட்டால் இன அழிப்புக்குப் புறப்படும் இராணுவத்தை மீண்டும் முகாமினுள் முடக்குவதற்காக - இரவு பகலாய்க் காத்து நிற்கும் 'பிள்ளை'களுக்கு - சண்டைபிடித்துக் களைத்துப் போன நிலையில் - குறைந்தபட்சம் தேநீரையாவது கொடுப்பதற்கு அங்கே யார் இருப்பார்கள்?' - என்று செல்லம் நினைப்பதும் இதற்கு ஒரு காரணம்.

சண்டை ஓய்ந்தபிறகு - சூடான தேநீரை எதிர்பார்த்துப் 'பிள்ளைகள்' இந்த அம்மாவிடம் வருவது வழமையான விஷயமாகிவிட்டது. அவர்கள் சண்டையைப்பற்றி அம்மாவுக்குச் சொல்லுவார்கள். அம்மா ஆவலுடன் கேட்பாள். அவளிடம் சாப்பிட்டவர்கள், பழகியவர்கள் சண்டையில் காயம்பட்டதையும், சாவடைந்ததையும் அவர்கள் சொல்லும்போது உடைந்துபோவாள்; விம்முவாள். தன்னுடைய பிள்ளைகளுக்கு இப்படி வேதனையா? அவளவு பாசம் கொந்தளிக்கும். எதிரிகளைச் சபிப்பாள், திட்டுவாள். கோபத்தின் சுவாலை மூண்டெரியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்னமும் சத்தங்கள் ஓய்ந்தபாடில்லை.

இன்று செல்லத்தின் கணவருடையதிதி.

87-ஆம் ஆண்டு பிரம்பபடியில் இந்திய ராணுவடாங்கிகளின் கீழ் நசியுண்ட உயிர்களில் செல்லத்தின் கணவருடையதும் ஒன்று.

அன்றிலிருந்து இவள் தனிக்கட்டை. பிள்ளைகள் இல்லை. கணவருடைய ஒய்வூதியத்தில் வாழ்க்கை.

கடந்த ஐந்துவருடங்களாகக் கணவருடைய திதிவரும் தினத்தன்று, அருகிலுள்ள சிவன்கோவிலில்...

அரிசி, தேங்காய், இன்னும் ..... சமையலுக்குத்தேவையான பொருட்கள் எல்லாவற்றையும் ஐயரிடம் கொடுத்து, சிவனுக்கு அர்ச்சனை செய்து பிரசாதமும் பெற்றுக்கொண்டு வந்துதான், வீட்டில் சமையல் செய்து அவள் சாப்பிடுவது வழக்கமாகியிருந்தது.

போராளிகளை அன்றைய தினத்தில் வரவழைத்து, அவர்களையும் தன்னோடு சேர்ந்து சாப்பிடவைப்பாள்.

கணவனுக்குச் செய்யவேண்டிய மிகப்பெரிய கடமையை இந்தத் திதியில் அன்று தான் செய்வதாக நினைத்துச் செல்லம் திருப்திகொள்வாள்.

நேற்று மாலை உண்டியல் உடைத்துப் பொருட்களை வாங்கிவைத்து .. சிவன் கோவில் ஐயரிடமும் சொல்லி வைத்திருந்தாள் - நாளை கணவனுடைய திதி என்று.

சற்று ஓய்ந்திருந்த வெடிச்சத்தங்கள், இப்போது மீண்டும் இடைவிடாமல் கேட்கத்தொடங்கின.

இரண்டு உலங்கு வானூர்திகள் தாழப்பறந்து வட்டமிட்டுக்கொண்டிருக்க, குண்டுவீச்சு விமானங்கள் மாறி மாறிக் குத்தி எழுந்து குண்டுகளை வீசின.

'இண்டைக்குப் பாத்து இப்பிடி நடக்குதே...' - என்று அடிக்கடி மனதுள் கவலைகொண்டாள்.

''பிதிர்க்கடன் செய்யாமல் விட்டா, பிதிர்கள் சாபம்போடுமாம்'' என்று தனது தாய் முன்னர் அடிக்கடி சொல்வது இப்போது ஞாபகம் வருகிறது.

இதென்ன சோதனை?

வாகனங்களின் இரைச்சல் அடிக்கடி கேட்பதும், பின்னர் தேய்வதுமாக இருக்கிறது.

''காயப்பட்ட பொடியளைக் கொண்டு போகினம் போலை...! எத்தினை பிள்ளையள் காயம்பட்டுதோ... எத்தினை பிள்ளையள் உயிர் விட்டுதோ... சிவ சிவா...''

செல்லத்தின் மனம் ஒரு நிலையில் இல்லை. ஒருவேளை இடம்பெயர்ந்த சனங்களோடு சிவன்கோவில் ஐயரும் போயிருப்பாரோ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போயிருந்தால் இன்று திதி செய்ய முடியாமல் போய்விடும்.. 'பிதிர்க் கடன் செய்யாமல்விட்டா பிதிர்கள் சாபம் போடுமாம்...'

நேரம் 10-00 மணி

'கணீர் கணீர்' எனச் சிவன் கோவில் மணி ஒலிக்கிறது. 'அப்பாடா...'

செல்லத்தின் மனதில் பெரிய தொரு நிம்மதி பிறக்கிறது.

ஐயர் எங்கும் போகவில்லை...

அடுத்தது பகல் 12-00 மணிப் பூசை.

அந்த நேரத்துக்குத்தானே வருவ தாகச் செல்லம் ஐயரிடம் சொல்லியி ருந்தாள்.

பன்னிரண்டு மணிக்கு ஆரம்பித் தால் பூசை புனஸ்காரம் எல்லாம் முடியக் குறைந்தது இரண்டு மணி நேரம் ஆகும்...

முழுகிக் குளித்துக் கோவிலுக்குப் போகும் ஆயத்தத்துடன் செல்லம் வந்தபோது நேரம் 11-30 ஆகியிருந் தது...

'இப்ப வெளிக்கிட்டால் பன்னி ரண்டு மணிப்பூசைக்குச் சரியாயிருக் கும்...'

உரப்பையினுள் கட்டிவைத்திருந்த பொருட்கள், அர்ச்சனைப் பொருட் கள் யாவற்றையும் எடுத்துக்கொண்டு வீட்டைப் பூட்டிவிட்டுப் புறப்படுகி றாள்.

சண்டை ஓய்ந்துவிட்டதன் அறி குறியாய் இப்போது சத்தங்கள் முற் றாக ஓய்ந்திருந்தன.

உலங்குவானூர்தி - விமானங்கள் எதுவும் இல்லை.

வெளிப்படலையைத் திறந்த செல்லம் - மேலே ஒரு அடிகூட வைக் காமல் அப்படியே நின்று விடுகிறாள். முகத்தில் ஏதேதோ சிந்தனையின் சாயல்கள்...

'சண்டை ஓஞ்சிட்டுது... இன்னும் கொஞ்ச நேரத்திலை பிள்ளையள் ஆரும் என்னைத்தேடி வருங்கள்...'

'ராத்திரித் துவக்கம் அடிபட்டுக் களைச்சு இப்ப ஒரு தேத்தண்ணி குடிக்க என்னைத் தேடி வரேக்கை நான் இல்லாட்டி அதுகள் என்ன செய்யும்?'

குற்றம் செய்வது போன்றதொரு உணர்வில் அவள் பரிதவித்துப்போகி றாள்.

'பிதிர்க்கடன் செய்யாமல் விட்டா பிதிர்கள் சாபம் போடுமாம்...'

''சிவ சிவா...... நான் என்ன செய்ய?''- வாய்விட்டுக்கூறிய செல் லத்தின் மனதில் மாறிமாறிப் போராட் டம் நடக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போவதா? நிற்பதா?

ஒரு சில நிமிடங்கள் தான்—

அவளுள்ளே ஒரு தீர்மானம் பிறக்கிறது. திரும்பி உள்ளே வருகிறாள்.

87 - ஆம் ஆண்டு திலீபனுடைய இறுதி யாத்திரையில் கலந்துவிட்டு வந்தபிறகு, தொடர்ந்து சில நாட்கள் அந்தச் சோகத்திலிருந்து மீளமுடியாமல் தனது கணவர் தவித்த தவிப்பையும், போராளிகளின் மீதும், போராட்டத்தின் மீதும் அவர் வைத்திருந்த ஈடுபாட்டை வெளிப்படுத்திய அவரது நடவடிக்கைகளையும் செல்லம் இப்போது நினைத்துப் பார்க்கிறாள்...

பன்னிரண்டு போராளிகள் ஒரே சிதையில் எரிந்தபோது அந்தத் தீயில் தானும் விழுந்துவிட்டது போலப் புழுவாகத் துடித்த தன் கணவருடைய மனப்பாங்கு...... அவள் இப்போது நினைவில் மூட்டங்கொண்டன.

எந்த நேரம் என்றில்லாமல், யாரென்றில்லாமல்- ஊருக்குள் திரியும் எந்தப் போராளியைக் கண்டாலும், வீட்டுக்குக் கூட்டிவந்து சாப்பிடச் செய்தபின்பே, அனுப்பிவைக்கும் தன் கணவருடைய பாச உணர்வு .. மீண்டும் மீண்டும் வருகின்றது.

பெரும்பாலான நாட்களில், போராளிகள் இவர்களின் வீட்டுக்கு வந்துபோனபிறகு, ''போராட்டத்துக்கு அனுப்பி வைக்கிறதுக்கு எங்களுக்கொரு பிள்ளை இல்லாமல் போட்டுதடி செல்லம்...'' என்று கூறி ஆதங்கப்படும் உணர்வுள்ள அந்த மனிதரின் பரிதவிப்பு மாறாமல் அவளுள் துளிர்க்கிறது.

'தமிழனை அழிப்பதற்காகப் பல்கலைக்கழக வளவினுள் இறக்கப்பட்ட இந்திய இராணுவத்தினர் இருபத்தொன்பது பேரையும், இறக்கப்பட்ட கையோடு வெற்றிகரமாக எதிர்த்தடித்துவிட்டனர் எங்களுடைய போராளிகள்' என்ற செய்தி கேள்விப்பட்டதும், அந்தக்காட்சியை நேரில் காண்பதற்கென அச்சுவேலியிலிருந்து மிதிவண்டியில் திருநெல்வேலிக்குப் போய்த் திரும்பி வராமலே உயிர் பிரிந்த தனது கணவனை... இப்போது நெகிழ்ச்சியோடு நினைவு கூர்கிறாள் செல்லம்.

இப்படிப்பட்ட தன் கணவர், சண்டைபிடித்துக் களைத்துப்போய் வரப்போகின்ற பிள்ளைகளைப் பற்றி எண்ணிப்பாராமல், திதி செய்வதற்காக கோவிலுக்குப் போகும் தன் செயலை, நிச்சயம் ஏற்றுக்கொள்ள மாட்டார் என்பதை அவள் மனம் உணர்கிறது.

இன்று - தன் கணவர் உயிருடன் இருந்திருந்தால், இந்தச் சமயத்தில் என்ன செய்திருப்பார்......? அல்லது செல்லம் எதைச் செய்யவேண்டும்? என எதிர்பார்த்திருப்பார் என்பதும் மனதில் கேள்விகளாக முகங்காட்டுகின்றன.

பிதிர்க்கடன் என்பது வெறுமனே ஒரு சம்பிரதாயமல்ல.... ஒரு சடங்குமல்ல...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'பிதிர்கள்' என்று சொல்லப்படுகின்ற, எம்மைப் பிரிந்துபோன ஜீவன்கள், நாங்கள் எதைச் செய்தால் ஆத்மதிருப்தி அடையுமோ, அதுதான் உண்மையான - அர்த்தமுள்ள - பிதிர்க் கடன்.

செல்லத்தின் மனதில் தெளிவு பிறக்கிறது.

''உங்கடை திதியை இந்த வருசம் தான் உண்மையான அர்த்தத்தோடை செய்யப்போறன்...'' என்று நினைத்தவளாய், கணவருடைய படத்துக்கு முன்னால் ஒரு நிமிடம் கைகூப்பி நின்ற செல்லம், சமையலறைக்குப் போய் அவசரம் அவசரமாக அடுப்பைப் பற்றவைக்கிறாள்.

உரப்பையைப் பிரித்துச் சமையல் பொருட்களை வெளியே எடுக்கிறாள்.

இன்னும் சிறிது நேரத்தில் அவளைத்தேடி வரப்போகும் பிள்ளைகளுக்கு ருசியான திடீச் சாப்பாடு தயாராகிக்கொண்டிருக்கிறது.

சிவன் கோவிலில் உச்சிக்காலப் பூசைக்கான ஆயத்தமணி 'கணீர் கணீர்' என ஒலிக்கிறது.

கணவனோடு, ஒவ்வொரு போராளிகளினதும் எண்ணங்கள் அவளில் நினைவாகப் பிறக்கின்றன. தன்கையால் சோறுதின்ற பிள்ளைகள், இன்றைக்கு...

மணியொலி கேட்க, அந்த வீரர்களின் நினைவுகள் நெஞ்சிலெழுகின்றன. அவளின் விழிகளில் அவர்கள் நிறைந்து போயிருக்கிறார்கள். □□

''எமதுமண்ணுக்காக, எமதுமக்களுக்காக, இன்னுயிர்களை அர்ப்பணித்த தியாகிகளை இன்றுநாம் நமது இதயத்தின் ஆலயங்களில் நினைவுகூர்ந்து கௌரவிக்கின்றோம். ஒரு புனித இலட்சியத்துக்காக வாழ்ந்து, அந்த இலட்சியத்துக்காகப்போராடி, அந்த இலட்சியத்தை அடைவதற்காகத் தமதுவாழ்வைத் தியாகம்செய்த மாவீரர்கள் மகத்துவமானவர்கள்.''

—தமிழீழத் தேசியத்தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# மாவீரர் வீரம் வாழ்க

முருகனடியான்

போர்முகத்தில் ஆட்கள் பலம் அணிகள் ஆக்கம்
புதுப்புதிதாய் ஆயுதங்கள் கருவியேற்றம்;
சேர்விதத்தில் திரட்டி, நெடும் திட்டமிட்டு(ச்),
சிந்தையிலே வஞ்சனையைத் தேக்கிவந்து;
நேர்முகத்தில் எமையழிக்க நினைத்தபொல்லா
நீசர்களின் நினைப்பழிய நிமிர்ந்துநின்று;
ஓர்முகமாய் உயிர்க்கருவி ஏந்திவென்று;
உரமான மாவீரர் உறுதிவாழ்க!

2

மண்காத்து; மொழிபோற்றி; இனத்தையேற்றி,
மானமதைக் காவாக்கால் மாவீரந்தான்
என்காக்கும்; இதற்கின்றேல் உயிரும்ஊனும்
எதற்கென்று இறுமாந்து, தமிழர் ஆண்மைப்
பண்பாக்கும் பயனாகப் பகையையோட்டிப்;
பறைசாற்றிப் புகழ்சேர்த்து, ஈழமண்ணைக்
கண்காக்கும் இமைபோலக் களங்களாடிக்
காவல் செய்த மாவீரர் கற்புவாழ்க!

3

ஆத்மீகம், சாத்வீகம் அகிம்சை, நேர்மை,
அறவழியில் தற்கொடைகள் பலவும்தந்து;
மீத்தூரும் கரும்புலிகள் ஆகி;மேன்மை
மேதினியே காணாத புதுமைசெய்து;
காத்தூரும் களமெங்கும் புயலாய்மாறிக்
கனன்றெழுந்து கப்பல்கன ரகங்கள்சாடி
ஏத்தூரும் வானூர்தி வீழ்த்திவாகை
ஏற்றிட்ட மாவீரர் ஓர்மம்வாழ்க!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



4

களம் சென்ற போதெல்லாம் ''பரணி''பாடிக்
களைப்புற்ற வேளையெலாம் கலைகளாடி
வளமொன்றப் போராடப் புகுந்துஅங்கும்
வற்றாத தமிழுணர்வை எழுதுகோலின்
நலமுந்தத் தரமான படைப்புத்தந்து;
நடைநடந்து ஆயுதங்கள் பலவும்அள்ளிப்
பலம்விஞ்சக்; கனவெல்லாம் எதிரிஏங்கப்;
பயம்தந்த மாவீரர் மாண்புவாழ்க!

5

தொட்டுடலை உயிரோடு பகைவன்வந்து,
தூக்காத வகைசெய்து, மானநோன்பு
இட்டுயர; விழுப்புண்ணை ஏற்று,வீழும்
இமைப்பொழுதில் நஞ்சுண்டு சாவைஏற்கும்
பொற்புடைய புலிவீரன் போல,இந்தப்
புவியெங்கும் நாம்கண்ட தில்லை;என்ன
அற்புதமோ! அதிசயமோ! உலகிலுள்ளோர்
அதிர்வுற்றார்; மாவீரர் ஆற்றல்வாழ்க!

6

நடுகல்லாய், நிழலுருவாய் கொலுவாய்மற்றும்
நனவுமணி மண்டபமாய் எழிலாய்உற்று,
வடுவில்லா மறவரென ஊர்கள்;வீதி
வளைவெல்லாம் தனிப்பெருமை சொல்லச்சொல்ல;
விடுதலையின் புகழ்ப்பாடல் செவிகளெல்லாம்
வீரவுணர் வூட்டிநிதம் தோட்கத்தோட்க
எடுகோளாய் தமிழீழம் எங்கும்நின்று,
எதிரொலிக்கும் மாவீரர் வீரம்வாழ்க!

''நீண்ட விடுதலைப்பயணத்தில், சோர்வுகள் எம்மை ஆட்கொள்ளலாம். போராட்டவாழ்வின் பெருஞ்சுமைகள் எம்மை அழுத்திப்பிடிக்கலாம். மேலும் பளுக்கள் எம்மீது சுமத்தப்படலாம். ஆனால் நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக்கொண்டு, உறுதிகொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால் எந்த ஒரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ - அழிக்கவோ முடியாது.''

—தமிழீழத் தேசியத்தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போற்றப்படவேண்டிய பண்பாடாகட்டும்

எமது தாயகமாம் தமிழீழ நாட்டின் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிகமுக்கிய நாளாகும். மாவீரர் நாள் என்பது, தமிழீழத்தின் விடிவுக்காகவும். உயர்வுக்கா கவும் உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈய்ந்து, இந்த மண்ணுக்கே உரமாகிவிட்டவர்களினதும், எமது மூச்சுடன் கலந்து விட்டவர்களினதுமாகிய நினைவு நாளாகும்.

உங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளும், எமது சக போராளிகளுமான இம்மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சியதாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்பட முடியாதவையாகவும், புனிதத்தன்மை வாய்ந்ததுமாகும். காலம் காலமாக நினைவு கூர்ந்து என்றும் போற்றப்படவேண்டியவை யாகும்.

இம்மாவீரர்களின் நினைவுகள் எம்மை வழிநடாத் தும் உந்துசக்தியாக, என்றும் இருக்கும். மாவீரர் களினது இத்தகைய நினைவுகூரல் என்பது, ஒரு நிகழ்வாக இருந்துவிடாது, எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், பண்பாட்டுக்குரியவையா கவும் வளர்ந்து வரவேண்டும்.

இந்த எமக்குரிய உயரிய நிகழ்வை தத்துவார்த்த மாகவும், உணர்வு பூர்வமாகவும் நிலை நாட்டுவதற் காக எமது தமிழீழ மக்கள் அனைவரினதும் மனமுவந்த, ஒருங்கிணைந்த பங்களிப்புக்களை வேண்டிநிற்கிறோம்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

பொன். தியாகம்
பொறுப்பாளர்
தமிழீழ மாவீரர் பணிமனை
அரசியல்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மனிதனைத் தேடும் மனிதன்

பிரம்மஞானி

சிறப்புக்கட்டுரை
**மனிதனைத் தேடும் மனிதன்**
**(2)**

பாலுணர்வை மையமாக வைத்து சிக்மண்ட்பிரைய்ட் சித்தரித்துக்காட்டும் ஆசை உலகத்தின் (*REALM OF DESIRE*) நிர்ப்பந்தங்களைப் பார்க்கிலும் மனிதனின் உயிர்வாழ்வை நிர்ணயிக்கும் இன்னொரு உலகமும் இருக்கிறது. அது தான் தேவை உலகம் (*REALM OF NEEDS*).

உண்பதற்கு உணவு, உடுத்துவதற்கு உடை, உறங்குவதற்கு உறைவிடம், காலூன்றி நிற்பதற்கு நிலம் என்றவகையில்நாளாந்த சீவியத்திற்கு ஆதாரமான எண்ணற்ற தேவைகளின் அழுத்தத்தால் மனிதப்பிறவிகள் ஒருவர் ஒருவருடன் இடர்பட்டு, முரண்டு, போராடி வாழும் ஒருகொடுமையான உலகமாக இந்தத் தேவை உலகம் அசைகிறது.

இந்தத் தேவை உலகத்தில் பசியுணர்வு பிரதானமானது. பாலுணர்வின் உந்துதலைவிட பசியுணர்வின் உறுத்துதல் மிகவும் கொடியது. கனவிலோ, கற்பனையிலோ, மனவுலக மருட்சியிலோ பசியுணர்வின் வேட்கையை தணித்துவிட முடியாது.

தினமும் அது என்னை வதைக்கிறது. வாட்டி எடுக்கிறது. எனது மடிக்குள்ளிருந்து நெருப்பாகச் சுடுகிறது. அதன் வேட்கையை தணிக்காதுபோனால் எனது வாழ்க்கையே அற்றுப்போகும். உயிரியக்கத்திற்கு அதுதான் எல்லாம். அதற்குப் பின்புதான் மற்றெல்லாம். இந்தப்பூவுலகிலுள்ள கோடானுகோடி வாய்களதும், வயிறுகளதும் வாழ்நிலைத் தவிப்பாக, அன்றாட அவலமாக, பசியுணர்வு பூதாகரத் தோற்றப்பாடு கொள்கிறது. தவிர்க்க முடியாத இந்தத் தேவையின் மையத்திலிருந்தே மனித முனைப்புகளின் அசைவியக்கமாக இருப்பின் சக்கரம் சுழல்கிறது.

மனிதனின் ஆணிவேர் இயற்கையில் ஆழப்பதிந்திருக்கிறது. தனது வயிற்றை நிரப்பிக் கொள்வதிலிருந்து தனது சீவியத்திற்கு ஆதாரமான தேவைகள் அனைத்தையும் இயற்கையிலிருந்தே மனிதன் பெற்றுக் கொள்கிறான். தேவை உலகத்து நிர்ப்பந்தங்கள் மனிதனை இயற்கையோடு பிணைத்துவைத்திருக்கிறது; விலங்கிட்டு வைத்திருக்கிறது. அனந்த காலமாக அகற்றமுடியாத இந்தச் சங்கிலிப் பிணைப்பில் கட்டுண்டு கிடக்கும் மனிதன், இயற்கையோடு போராடி, இயற்கையின் நிர்ப்பந்தப் பிடியிலிருந்து விடுதலைபெற எத்தனித்துவருகிறான். ஒருபுறம் தேவையின் கொடூர நிர்ப்பந்தமும், மறுபுறம் விடுதலையின் உந்துதலுமாக மானிடம் ஒரு சிக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லான முரண்பாட்டில் சிக்குண்டு கிடக்கிறது.

இந்தத் தேவை உலகத்தின் முரண்பாட்டுக் களத்திலிருந்தே மனிதன்பற்றிய விசாரணையைத் தொடங்குகிறார் கார்ள் மாக்ஸ்.

'எல்லாவற்றிற்கும் முகற்படியாக மனிதர்கள் வாழவேண்டும். உண்டு, உடுத்தி, உறங்கி, உறவுகொண்டு வாழவேண்டும். வாழும் சூழ்நிலையை முதலில் உருவாக்கிக் கொண்ட பின்புதான் மனிதர்கள் வரலாற்றைப் படைக்கமுடியும். தமது வாழ்நிலைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய, மனிதர்கள் என்று பொருளுற்பத்தியை ஆரம்பித்தார்களோ, என்று பொருளுலகத்தைப் படைக்கத்தொடங்கினார்களோ, அன்றிலிருந்தே மனித வரலாறுஆரம்பமாகிறது', என்கிறார் மாக்ஸ்.

## பிரம்மஞானி

தேவை உலகத்து அழுத்தத்தால் மனிதனுக்கும் இயற்கைக்கும் மத்தியில் தொடர்ச்சியாக, முடிவில்லாத நிகழ்வுப் போக்காக நடந்துவரும் போராட்டமே உழைப்பு ஆகிறது. இந்த உழைப்பானது மானிடரின் மாபெரும் ஆக்க சக்தியாக, செயற்பாட்டு சக்தியாக பொருளுலகத்தைப் படைக்கிறது.

உழைக்கும் மனிதனே இந்தப் பொருளிய உலகத்தின் சிருஷ்டி கர்த்தா. மானிடரின் பொருளிய வரலாற்றை தொடங்கி வைப்பவனும் அவனே.

உழைக்கும் மனிதனை மையப்புள்ளியாக வைத்தே கார்ள் மாக்ஸ் தனது சிந்தனைக் கோட்டையை கட்டி எழுப்புகிறார்.

உழைக்கும் மனிதன், அவனிடமிருந்து உழைப்பாக வெளிப்பாடு காணும் உழைப்பு சக்தி. அந்த உழைப்பு சக்தியிலிருந்து உருவாக்கம்பெறும் உற்பத்தி உலகம், அந்த உற்பத்தி உலகத்திலிருந்து உருப்பெறும் உற்பத்தி உறவுகள், அந்த உற்பத்தி உறவுகளிலிருந்து தோற்றம்கொள்ளும் வர்க்கப் பிரிவுகள், அந்த வர்க்கங்கள் மத்தியில் முனைப்புறும் முரண்பாடுகள், அந்த முரண்பாடுகளிலிருந்து வெடிக்கும் புரட்சிகள், அந்தப் புரட்சிகளால் தோன்றும் சமூக மாற்றங்கள், அந்த சமூக மாற்றங்களாக அசைந்துசெல்லும் வரலாறு — இப்படியாக உழைக்கும் கரங்களிலிருந்து கட்டவிழ்கிறது மனித சரித்திரம்.

**சமூகம் என்பது தனிமனிதர்களால் அமையப்பெற்ற ஒரு மக்கள் கூட்டம் அல்ல. அன்றி தனி மனிதர்களின் உறவு நிலையையும் அது குறித்துநிற்கவில்லை. சமூகம் என்பது ஒரு கட்டமைப்பாக இயங்குகிறது. பல்வேறு சமூகக் கூறுகள் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக, ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்ததாக, ஒன்றோடு ஒன்று ஆதிக்கம் செலுத்துவதாக ஒரு முழுமையான கட்டமைப்பாக சமூகம் செயற்படுகிறது.**

மனிதனே பொருளுலகத்தையும் படைக்கிறான்; சமூகத்தையும் படைக்கிறான்; வரலாற்றையும் படைக்கிறான்; தன்னையும் படைக்கிறான். மாக்சிய தரிசனம், மனிதனை, இந்த உலகத்தின் கடவுளாகச் சித்தரிக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த மாமனிதன் தனிமனிதனல்ல, அவன் சமூக மனிதன். சமூக உறவுகளால் உருவாக்கம்பெறும் மனிதன். சமூக உறவுகள் என்ற சிக்கலான சிலந்தி வலைக்குள் சிக்கப்பட்டிருக்கும் மனிதன்.

சமூகம் என்பது தனிமனிதர்களால் அமையப்பெற்ற ஒரு மக்கள் கூட்டம் அல்ல. அன்றி தனிமனிதர்களின் உறவு நிலையையும் அது குறித்துநிற்கவில்லை. சமூகம் என்பது ஒரு கட்டமைப்பாக இயங்குகிறது. பல்வேறு சமூகக் கூறுகள் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக, ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்ததாக, ஒன்றோடு ஒன்று ஆதிக்கம் செலுத்துவதாக, ஒரு முழுமையான கட்டமைப்பாக சமூகம் செயற்படுகிறது.

**உழைக்கும் மனிதன், அவனிடமிருந்து உழைப்பாக வெளிப்பாடு காணும் உழைப்பு சக்தி, அந்த உழைப்பு சக்தியிலிருந்து உருவாக்கம்பெறும் உற்பத்தி உலகம், அந்த உற்பத்தி உலகத்திலிருந்து உருப்பெறும் உற்பத்தி உறவுகள், அந்த உற்பத்தி உறவுகளிலிருந்து தோற்றம்கொள்ளும் வர்க்கப் பிரிவுகள், அந்த வர்க்கங்கள் மத்தியில் முனைப்புறும் முரண்பாடுகள், அந்த முரண்பாடுகளிலிருந்து வெடிக்கும் புரட்சிகள், அந்தப் புரட்சிகளால் தோன்றும் சமூக மாற்றங்கள், அந்த சமூக மாற்றங்களாக அசைந்துசெல்லும் வரலாறு — இப்படியாக உழைக்கும் கரங்களிலிருந்து கட்டவிழ்கிறது மனித சரித்திரம்.**

இந்தச் சிக்கலான சமூக உறவுகளுக்கு மத்தியில் தனிமனிதன் இருப்புக்கொள்கிறான். தனது இருப்புநிலையை தனிமனிதன் நிர்ணயித்துவிடுவதல்ல. சமூக இயக்கமே தனிமனிதனின் தலைவிதியை நிர்ணயித்துவிடுகிறது.

தேவை உலகத்து நிர்ப்பந்தங்கள் ஒருபுறமும், உற்பத்தி உறவுகளின் நிர்ணய சக்திகள் மறுபுறமுமாக, இயற்கையினதும் சமூகத்தினதும் அழுத்தங்கள் தனிமனிதனின் வாழ்நிலையை நிச்சயித்துவிடுகின்றன.

## மனிதனைத் தேடும் மனிதன்

கார்ள் மாக்சின் புகழ்பெற்ற அறிவியல் ஆய்வுநூலான 'மூலதனம்' முதலாளிய பொருளுற்பத்தி உலகத்தை அறுவைசெய்து பார்க்கிறது. முதலாளித்துவத்தின் முரண்பாட்டுக் கோலங்களையும், அதன் அசைவியக்க விதிகளையும் விளக்க முனைகிறது.

'மூலதனத்தில்' திரைநீக்கம்செய்யப்படும் முதலாளிய சமூக அமைப்பில் தனித்துவமான, தனி இயல்புகளுடைய தனிமனிதர்களைக் கண்டுகொள்ள முடியாது. இங்கு தனிமனிதர்கள், பொருளாதாரக் கருத்துருவங்களின் மனித வடிவங்களாக (PERSONFICATIONS OF ECONOMIC CATEGORIES) சித்தரிக்கப்படுகிறார்கள். உற்பத்தி உறவுகளின் சுமைதாங்கிகளாக உருவகம் பெறுகிறார்கள். வர்க்க உறவுகளால் வனையப்பட்ட, வர்க்க நலன்களைப் பிரதிபலிக்கும் வர்க்க மனிதர்களாக இனம்காணப்படுகிறார்கள்.

முதலாளித்துவம் என்ற பொருள் உற்பத்தி நாடகத்தில், முதலாளி என்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொழிலாளி என்றும், விற்பவன் என்றும் வாங்குபவன் என்றும், எண்ணிலாப் பாத்திரங்களைத் தாங்கி மனிதர்கள் மேடையேறுகிறார்கள். அந்தந்தப் பாத்திரங்களை அவனவன் தேர்ந்துகொள்வதல்ல. அந்தந்தப் பாத்திரங்களில் அவனவன் அமர்த்தப்படுகிறான். முதலாளித்துவம் ஒரு ராட்சத இயந்திரமாக, மனிதனுக்குப் புறம்பான ஒரு அசுர சக்தியாக, மனிதனை அடிமை கொள்கிறது. தனிமனிதத்தைச் சிதைத்து விடுகிறது. மனித முகத்தை அழித்துவிடுகிறது.

உழைக்கும் மனிதன், முதலாளிய சந்தையில் ஒரு விலைப் பொருள் ஆகிறான். தனது வயிற்றை நிரப்ப தனது உழைப்பை விற்கிறான். தன்னை விற்கிறான். முதலாளிய ஆதிக்க சக்தி, தொழிலாளியின் ஆக்கசக்தியை விழுங்கிக் கொள்கிறது. அவனது உழைப்பு சக்தியை பிழிந்து எடுக்கிறது. தொழிலாளியின் உதிரத்திலிருந்து முதலாளி உபரி லாபத்தை எடுத்துக்கொள்கிறான்.

உழைக்கும் மனிதன் வியர்வை சிந்தி உழைக்கிறான். அவனது உழைப்பு சக்தி பொருள் வடிவம் எடுக்கிறது. மனிதனின் சாரம் பொருள்களில் பொதிந்து பொருள் மயமாகிறது. உழைப்பில் மனிதன் பொருளாக மாறும் விந்தை ஒன்று நிகழ்கிறது. அந்தப் பொருள்களிலிருந்து பண்ட உலகம் தோன்றுகிறது. உழைப்பு சக்தியால் உருவாக்கம்பெறும் இந்தப் பண்ட உலகம் உழைப்பவனுக்கே அந்நியமானதாக ஒரு புதிரான பொருளுலகமாகத் தோற்றப்பாடு கொள்கிறது. இந்த முதலாளிய பொருளுலகில் உழைக்கும் மனிதன் தனது ஆக்கத்தின் அடையாளத்தை இனம்காண முடியாது. அவனது ஆக்கம், அவனது படைப்பு, அவனுக்கே அந்நியமாகி, அவனிடமிருந்து புறம்பாகி, பண்டமாகி, பணமாகி, லாபமாகி, இன்னொருவனின் செல்வமாகி, கூடுவிட்டு கூடு பாய்கிறது. முதலாளிய பொருளுலகில் உழைக்கும் மனிதன் தன்னை இழந்து விடுகிறான். தனது மனிதத்தை இழந்துவிடுகிறான்.

*முதலாளித்துவத்தின் இரும்புப் பாதங்களால் மனித சருகுகளாக மிதிபடும் பாட்டாளிவர்க்க மனிதன், சுயவிழிப்புணர்வோடு வரலாற்றுப் பிரக்ஞையோடு, வரலாற்றைப் படைக்கவேண்டும். அந்த வரலாற்றுப் படைப்பாக உருவாக்கம்பெறும் புதிய சமுகத்தில், பொருளியப் பொதுமைநிலவும் அந்த சமத்துவ சமுகத்தில், யுகம் யுகமாக மனிதர்கள் மத்தியில் நிலவிவந்த முரண்பாடுகள் நீங்கிய சூழலில் 'சோசலிச மனிதன்' பிறப்பெடுப்பான். ஒரு புதிய யுகத்தின் புதிய மனிதனாக 'சோசலிச மனிதன்' திகழ்வான்.*

முதலாளிய பொருள் உற்பத்தி முறைமையில் மனிதச் சிதைவு (DEHUMANISATION) நிகழும் சூத்திரத்தை கார்ள் மாக்சின் 'மூலதனம்' பிட்டுக்காட்டுகிறது.

மாக்சிய தரிசனத்தில், சமூகத்திற்கு வெளியாக, சமூக இயக்கத்திற்குப் புறம்பாக மனிதனைக்கண்டுகொள்ளமுடியாது. மனித வாழ்வு சமூக வாழ்வாக, சமூக உறவுகளால் பின்னப்பட்ட வாழ்வாக, சமூக முரண்பாடுகளால் சிக்குப்பட்ட வாழ்வாக, சமூக சக்திகளால் நிர்ணயிக்கப்பட்ட வாழ்வாக, சமூக இயக்கத்திற்கு உட்பட்ட வாழ்வாக இயங்குகிறது. தனிமனிதன், தனித்த ஒருவனாக, சமூகத்திற்கு வெளியாக நின்று, தனது வாழ்நிலையை நிர்ணயிக்கமுடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமூகத்தை மாற்றியமைக்காமல் தன்னை மாற்றியமைக்கமுடியாது. சமூகத்திற்கு உள்ளே நின்று, சமூகப்பிறவியாக நின்று, சமூக உறவுகள் ஊடாகவே மனிதன் தன்னை உருவாக்கிக்கொள்ளமுடியும். காலம் காலமாக மனிதன் படைத்த சமூக உலகங்கள் மனித விடுதலைக்கு வழிகோல வில்லை. மனித முரண்பாடுகளைக் களைந்துவிடவில்லை. பொருண்மிய சமத்துவத்தை உருவாக்கவில்லை. வரலாற்றுப் பிரக்ஞையின்றி, வரலாற்று அசைவியக்கம் பற்றிய விழிப்புணர்வின்றி, மனிதன் வரலாற்றைப் படைத்திருக்கிறான். வரலாற்றைப் படைக்கும் சக்தியாகிய உழைக்கும் மனிதன், ஒடுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு, அடிமைப்படும் மனிதன், முதலாளித்துவத்தின் இரும்புப் பாதங்களால் மனித சருகுகளாக மிதிபடும் பாட்டாளிவர்க்க மனிதன், சுயவிழிப்புணர்வோடு, வரலாற்றுப்பிரக்ஞையோடு, வரலாற்றைப் படைக்க வேண்டும். அந்த வரலாற்றுப்படைப்பாக உருவாக்கம்பெறும் புதிய சமூகத்தில், பொருளியப் பொதுமைநிலவும். அந்த சமத்துவ சமூகத்தில், யுகம் யுகமாக மனிதர்கள் மத்தியில் நிலவிவந்த முரண்பாடுகள் நீங்கிய சூழலில் 'சோசலிச மனிதன்' பிறப்பெடுப்பான். ஒரு புதிய யுகத்தின் புதிய மனிதனாக 'சோசலிச மனிதன்' திகழ்வான். அகத்திலும் புறத்திலும் விடுதலைபெற்றவனாக, தனது ஆக்க சக்திக்கு ஆக்கபூர்வ வெளிப்பாடு காண்பவனாக, முழு மனிதனாக, அவன் உருவாக்கம்பெறுவான். இந்த 'சோசலிச மனிதனின்' பிறப்புடன், வர்க்க முரண்பாட்டில் சுழலும் வரலாற்றுச் சக்கரம் தனது அசைவியக்கத்தை நிறுத்திக் கொள்ளும்.

முதலாளித்துவத்தின் கொடுமையை வெறுத்து, முழு மனித விடுதலையை விரும்பிய கார்ள் மாக்ஸ், இப்படியாக ஒரு தீர்க்க தரிசனம் சொன்னார்.

சோசலிச மனிதன் பிறப்பு எடுத்தானா? பொதுமையின் சமத்துவம் புது மனிதனை, முழு மனிதனை தோற்றுவித்ததா? கார்ள் மாக்ஸ் கண்ட கனவு நிறைவு பெற்றதா? என்ற கேள்விகள்பற்றி பிறிதொரு கட்டுரையில் பார்ப்போம். இங்கு இது ஆய்வுப்பொருள் அல்ல.

கார்ள் மாக்ஸ் கனவுகண்ட மனிதன் வேறு, கண்டுகொண்ட மனிதன்வேறு. அவர் கண்டுகொண்ட மனிதன்பற்றியே நாம் இங்கு கவனம் செலுத்துகிறோம்.

> முதலாளியம் மனித தொழிலாதிக்க சக்தியால் கட்டி எழுப்பப்படுகிறது. மனிதன்கட்டிய அக்கோட்டைக்குள் மனிதனே சிறைப்பட்டு விடுகிறான். படைப்பாளியை படைப்பே விழுங்கிக்கொள்கிறது.

'மனிதன் யார்'? என்ற கேள்விக்கு மாக்சியத்தில் விடைகாண முடியாது என்பது சில நவமாக்சிய தத்துவாசிரியர்களின் கருத்து. மாக்சியமானது சமூக உறவுகள் பற்றியும், சமூக அசைவியக்கம் பற்றியும், சமூக வரலாறுபற்றியும் ஆழமாகப் பார்க்கிறதே தவிர மனிதம்பற்றியோ, மனிதன் பற்றியோ தேடுதலை நடத்தவில்லை என்பது இவர்களது வாதம். இந்தக்கருத்தை முன்வைப்பவர்களில் அல்தூசர் முக்கியமானவர்.

கார்ள் மாக்சின் சிந்தனைஉலகை இரு கூறுகளாக வகுத்துக்காட்ட முனைகிறார் அல்தூசர். ஒன்று இளம்பராய தத்துவார்த்த எழுத்துக்கள். மற்றது, முதிர்ந்த மாக்சின் 'மூலதனம்'. இளம்பராய எழுத்துக்கள் தத்துவக் கருத்துநிலை சார்ந்தவை என்பதும், 'மூலதனம்' அறிவியற் கோட்பாடுகளைக்கொண்ட வரலாற்று விஞ்ஞானமாக அமையப்பெற்றிருக்கிறது என்பதும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவரது கருத்து. இளம்பராய தத்துவ எழுத்துக்களில் மனிதத்துவம்பற்றி (HUMANISM) மாக்ஸ் கூறியவை எல்லாம் கருத்து நிலை சார்ந்த சித்தாந்த வாதம் என ஒதுக்கிவிடும் அவர், மூலதனத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்.

மாக்சின் சிந்தனை உலகை, சித்தாந்தம் என்றும் விஞ்ஞானம் என்றும் இரு வகைப்படுத்தி மனிதத்துவத்திற்கு சாவு மணி அடிக்கும் அல்தூசரின் வாதத்தை நிராகரிப்பவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். மாக்சின் எழுத்துக்களில் ஒரு தொடர்ச்சியான படிநிலை வளர்ச்சி இருக்கிறது என்பதும் முதிர்ந்த வயதில் நிகழ்ந்த சிந்தனை முறிவு (EPISTEMOLOGICAL BREAK) என்ற அல்தூசரின் கருத்து தவறானது என்பதும் இவர்களது நிலைப்பாடு. மாக்சின் தத்துவார்த்த எழுத்துக்கள் முற்று முழுதாக மனிதத்துவம்பற்றியே குறிப்பிடுகிறது என்பதும் 'மூலதனத்திலும்' முதலாளித்துவத்திற்கு எதிரான தார்மீகப் பிரகடனங்கள் நிறையவுண்டு என்பதும் இவர்களது வாதம். சர்ச்சைக்குரிய இந்த வாதப்பிரதிவாதங்களை இங்கு விபரித்துக் கூறுவது அவசியமில்லை.

கார்ள் மாக்ஸ் ஒரு மனிதாபிமானி. மானிடத்தின் விடுதலையை விரும்பியவர். முழு மனிதனைக் கனவு கண்டவர். மனித உலகத்தை மாற்றியமைக்கவிரும்பியவர். மனித செயற்பாடு மூலம் அது சாத்தியமாகும் என நம்பியவர். அவரது தார்மீக இலட்சியம் நெருப்பு வரிகளாக அவரது எல்லா எழுத்துகளிலும் சுடர்விடுகிறது.

மனிதன் யார்? என்ற விசாரணையை அவர் நடத்தவில்லை. அது அவரது ஆய்வுப் பொருளும்(ANALYTICAL OBJECT)அல்ல. ஆனால் மனிதம்பற்றியும், மனிதத்துவம் பற்றியும், மனித வளர்ச்சிபற்றியும் அவர் அக்கறையோடு எழுதியிருக்கிறார்.

மனிதா சாரம் (HUMAN ESSENCE) என்ற பதம் அவரது தத்துவார்த்தச் சிந்தனையின் மையமாக அமைகிறது. மனித ஆக்க சக்தியை, சிருஷ்டி சக்தியை, அந்தச் சொல் குறித்து நிற்கிறது. சாராம்சத்தில், மனிதனை ஒரு சிருஷ்டி கர்த்தாவாக, ஒரு படைப்பாளியாகஅவர் பார்த்தார். பொருளுலகத்தைப் படைப்பவனாகவும் வரலாற்றை சிருஷ்டிப்பவனாகவும் மனிதனை அவர் சித்தரித்தார். இந்த மனித சிருஷ்டி சக்தியையே தொழிலாக்க சக்தியாக (LABOUR POWER) பொருட்படைப்பின் மூலசக்தியாக 'மூலதனத்தில்' வர்ணிக்கிறார். இந்தத் தொழிலாக்க சக்தி மனிதனிடமிருந்து அந்நியமாதலையே மனிதச் சிதைவு எனக் குறிப்பிடுகிறார்.

முதலாளியம் மனித தொழிலாக்க சக்தியால் கட்டி எழுப்பப்படுகிறது. மனிதன் கட்டிய அக்கோட்டைக்குள் மனிதனே சிறைப்பட்டுவிடுகிறான். படைப்பாளியை படைப்பே விழுங்கிக்கொள்கிறது. முதலாளியத்தின் அநீதியான சமூக உறவுகளால் விலங்கிடப்பட்டிருக்கும் மனிதனையே கார்ள் மாக்ஸ் கண்டார். எனவே, 'மூலதனத்தில்' சித்தரிக்கப்படும் மனிதன் முழு மனிதன் அல்ல. அவன் தன்னையிழந்த, தனது சுயத்தை இழந்த, தனது சுதந்திரத்தை இழந்த மனிதன். பொருண்மிய குறியீடாக, பொருண்மிய சக்திகளால் ஆட்டிப்படைக்கப்படும் ஒரு பொம்மை மனிதன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- பொருளிய வாழ்விற்கும், பொருண்மிய உறவுகளுக்குமே கார்ள் மாக்ஸ் முக்கியத்துவம் கொடுத்தார். மனித மனம், வாழ்க்கையை நிர்ணயிப்பதல்ல, பொருளியவாழ்வே மனித மனதை நிர்ணயித்துவிடுகிறது, என்று அவர் எழுதினார். சமூக உறவுகள் என்பது, அவரது ஆய்வில், உற்பத்தி உறவுகளால் உருவாகும் வர்க்க உறவுகளையே குறிக்கிறது. இந்த வர்க்க உறவுகளைத் தாங்கி நிற்கும் வர்க்க மனிதனையே அவர் சமூக மனிதனாகக் கண்டார். எனவே, மாக்சின் சமூக மனிதன் பொருளாதாரக் கட்டுமாணத்தின் வரம்பிற்குள் மட்டுமே முடங்கிக்கிடக்கிறான்.

சமூக உறவுகள் என்பது சிலந்திவலை போன்று சிக்கலானது. பல்முகப் பரிமாணங்களைக் கொண்டது. சமூகஉறவுகள்அனைத்தையும் பொருளாதார உறவு என்ற வட்டத்திற்குள் வரையறுத்து விட முடியாது.

சமூக உறவுகள் என்ற முடிச்சுகள் பல. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையானவை. தாய் பிள்ளை உறவு, சகோதர உறவு, தாம்பத்திய உறவு, குடும்ப உறவு, நட்புறவு, காதலுறவு, கல்வி உறவு, கட்சி உறவு, சமய உறவு, சாதிஉறவு, கலைஉறவு, பண்பாட்டு உறவு என்பவையும், இன்னும் எண்ணில்லாதவையுமாக சமூக உறவுகளால் மனிதர்கள் பிணைந்துகிடக்கிறார்கள். இந்த சமூக உறவுகளும், அவை விளைவிக்கும் தாக்கங்களும் மனித சுயத்தின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் ஏதுவாகின்றன. மனித உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைகின்றன.

**சமூக உறவுகள் என்பது சிலந்திவலை போன்று சிக்கலானது. பல்முகப்பரிமாணங்களைக்கொண்டது. சமூக உறவுகள் அனைத்தையும் பொருளாதார உறவு என்ற வட்டத்துக்குள் வரையறுக்கமுடியாது.**

வர்க்க உறவுகளை மட்டும் பிரதிபலிக்கும் வெறும் பொருளாதார மனிதனை முழுமையான சமூக மனிதனாகக்கொள்ள முடியாது.

மனிதன் வெறும் உழைக்கும் இயந்திரம் அல்ல. மனிதனின் சாரத்தை வெறும் உழைப்பு சக்தியாக, படைப்பாற்றல் சக்தியாக மட்டும் சித்தரித்துவிடமுடியாது. மனிதனிடம் உள்ளமுண்டு; உணர்வுகள் உண்டு; சமூகக் கலாசார வாழ்வில் பெறப்பட்ட பண்புகளுண்டு. இவை எல்லாம் ஒன்றுதிரண்டமனிதமுண்டு சுயமுண்டு, ஆளுமையுண்டு, ஆன்மாவுண்டு.(இங்குஆன்மா என்ற பதம் மனதின் ஆழ்நிலையைக் குறிக்கிறது.)

மாக்சிய தரிசனம் தனிமனிதனை ஒதுக்கிவிட்டதால் முழு மனிதனைக் காட்டவில்லை.

சமூக அறிவியலுக்கு மனிதத்துவம் பற்றிய விசாரணைகள் அவசியமில்லை என்பது சில மாக்சிய தத்துவாசிரியர்களின் கருத்து. மாக்சியம் சமூகவியலாக மட்டுமன்றி மனிதவியலாக முழுமைபெறுவதற்கு மனிதன்பற்றிய ஆழமான பார்வை தேவை என்பது வேறு சிலரது வாதம். மாக்சியத்தில் தனிமனிதமும் மனிதத்துவமும் உதாசீனம் செய்யப்பட்டதால்தான், மாக்சீய சித்தாந்தத்தை தழுவிக்கொண்ட சோசலிச அரசுகள் சர்வாதிகாரத்தை நிலைநிறுவி, தனிமனித சுதந்திரங்களை நசுக்க முயன்றன என்பதும் இவர்களது நிலைப்பாடு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாக்சியத்திலுள்ள இந்தக் குறைபாட்டை எப்படி நீக்குவது? மனிதனுக்கு முழுமையான விளக்கம் எவ்விதம் அளிப்பது?

மாக்சின் சமூகவியலுக்கும் பிரைட்டின் மனவியலுக்கும் திருமணம் செய்துவைத்தால் இந்தக் குறைபாட்டை நீக்கிவிடலாம் என சில மாக்சியவாதிகள் கருதினர். ஆனால் இந்த முயற்சிகளும் வெற்றிபெற்றதாகத் தெரியவில்லை. இரண்டு, வெவ்வேறான ஆய்வு இலக்குகளைக்கொண்ட அறிவியல் உலகங்களை ஒன்றிணைப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. நவ பிரைய்டிய சிந்தனையாளர்களான லக்கான் (LACAN) போன்றவர்கள் உளப்பகுப்பியலை மொழி அமைப்பியலாக உருமாற்றம் செய்ய முனைவதால் இந்த முயற்சிகள் மேலும் சிக்கலடைந்துள்ளன.

இப்படியாக மனிதனைத் தேடும் மனிதனின் முயற்சி தொடர்கிறது.

இந்த உலகம் மாறிவருகிறது. மாறி வரும் இந்த உலகத்துடன் மனிதனும் மாறி வருகிறான். காலம் என்ற காற்று அடித்துச்செல்லும் மாற்றம் என்ற படகில், ஒரு முடிவில்லாப் பயணத்தை தொடரும் மனிதன், தன்னை நோக்கிப்பார்க்கிறான். அந்தச் சுயதரிசனத்தில், அவனது முகம் அவனுக்கு புலப்படுவதில்லை. அது, சதா மாறிக் கொண்டிருக்கிறது. இறந்த காலத்தின் சுவடுகளும், எதிர்காலத்தின் நம்பிக்கைகளுமே அவனுக்குத் தென்படுகிறது.

ஆனால் மனிதன் தன்னைத் தேடுகிறான். முடிவில்லாத தொடர்கதையாக அந்தத் தேடுதல் தொடர்கிறது. □□

[பிரம்மஞானி வெளிச்சத்தில் தொடர்ந்தும் எழுதுகின்றார்]


தமிழீழத் தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய வாழ்த்துரையுடன்

**புதுவை இரத்தினதுரையின்**

**'நினைவழியா நாட்கள்'**

**(கவிதை நூல்)**

விற்பனையாகிறது. விலை: ரூபா 100/-

பெற்றுக்கொள்ள

**விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்**

நடுவப்பணியகம்

கோண்டாவில்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தரமான பொருட்களை
மலிவான விலையில் வாங்குவதற்கு
நாடுங்கள்

**மதன் ஸ்ரோர்ஸ்**
நெல்லியடி.

தரமான ஜெனரேற்றர் வாங்கவும் விற்கவும்
வீடியோ படப்பிரதிகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளவும்
ரீ. வி. டெக், ஜெனரேற்றர் வாடகைக்குப் பெறவும்
வீடியோ படப்பிடிப்புக்கும்

**வீடியோ என்ஜினியேர்ஸ்**
பிரதான வீதி, நெல்லியடி.

வாகன உதிரிப்பாகங்கள் (உழவு இயந்திரம், மோட்டார் சைக்கிள் உட்பட)
நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள்
எம்மிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.
என்றும் நியாயமான விலையில் எல்லா உதிரிப்பாகங்களுக்கும்

**லிபேர்ட்டி மோட்டோர் ஹவுஸ்**
அக்காகடை
கொடிகாமம் வீதி, நெல்லியடி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கலைவாணி கண்ணாடிக் களஞ்சியம்
அழகுசாதனப் பொருட்களையும், அன்பளிப்புப் பொருட்களையும்
வாங்குவதற்குச் சிறந்த இடம்

உங்களின் மனதுக்குப் பிடித்த வண்ணம்
அழகுசாதனப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளவும்,
அன்பளிப்புப் பொருட்களை மனநிறைவுடன்
வழங்குவதற்கு ஏற்ப வாங்கிக்கொள்ளவும்

**கலைவாணி கண்ணாடிக் களஞ்சியம்**
பிரதான வீதி, நெல்லியடி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பலசரக்குப் பொருட்களை
சில்லறையாகவும் மொத்தமாகவும்
பெற்றுக்கொள்ளுவதற்கு
எம்மிடம் வருக

## சர்வானந்தா வர்த்தக நிலையம்

பிரதான வீதி, நெல்லியடி.

அன்புள்ள நண்பா!

இப்பொழுது நெல்லியடி ஸ்ரீதிலகாவில் நல்ல பாதணிகள்
புதிய டிசைன்களில் விற்பனையாகிறது. அத்துடன் நீ எப்பொழுதும்
விரும்பும் அழகுசாதனப்பொருட்களும் ஸ்ரீதிலகாவில் உண்டு.
உடனேயே வந்து வாங்கிக்கொள்.

## ஸ்ரீ திலகா

யாழ்வீதி, நெல்லியடி.

பலசரக்குப் பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
விற்பனை செய்பவர்கள்

## ஜமுனா ரேட்ஸ்

பிரதானவீதி, நெல்லியடி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பலசரக்குப் பொருட்கள்
பாடசாலைப் புத்தகங்கள் + உபகரணங்கள்
விவசாய இரசாயனப் பொருட்கள்
எல்லாவற்றையும் எம்மிடம் பெற்றுக்கொள்க.

**திருமகள் ஸ்ரோர்ஸ் & புத்தக நிலையம்**
பிரதான வீதி, நெல்லியடி.

சில்வர் பாத்திரங்கள்
அழகுசாதனப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
எங்களிடம் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்

**ஸ்ரீ முகா**
பன்வலி ஹவுஸ்
பிரதான வீதி, நெல்லியடி.

உங்களின் தேவைகளை நிறைவுசெய்கிறது

**ஜெகா மோட்டோர்ஸ்**
பிரதான வீதி, நெல்லியடி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சகல ரக புடவை வகைகளுக்கும்
சிறந்த ஸ்தாபனம்
பலவர்ண ஆடை வகைகளை
விருப்பம்போல் தேர்ந்தெடுக்க நாடுங்கள்

## ஆனைமுகன் புடவை மாளிகை

பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

தலைமை ஸ்தாபனம்:

**ருட்லக் எம்போறியம்**

*பிரதான வீதி, பருத்தித்துறை.*

---

*பலசரக்குப் பொருட்களை*
*சில்லறையாகவும், மொத்தமாகவும்*
*பெற்றுக்கொள்ள*

## அம்பிகா வர்த்தக நிலையம்

பிரதான வீதி, நெல்லியடி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உங்கள் பிள்ளைகளுக்கு
பாதுகாப்புடன் கூடிய
பஸ்சேவை...

திருமணம்
மற்றும்
வைபவங்களுக்கான
சிறப்பு பஸ்சேவை

ரஜிதா
பாடசாலை பஸ்சேவை

தொடர்புமுகவரி:
ரஜிதா
பாடசாலை பஸ்சேவை

ப. ரவீந்திரன்
சிவன் வீதி, பஞ்சுகடையடி
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

நமதுங்கள் தமிழீழம் நாளைபிறக்கும்
நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்
மாண்டவீரர் கனவு பலிக்கும்
மகிழ்ச்சிக் கடலில் தமிழ்மண் குளிக்கும்.



கொண்ட இலட்சியம் குன்றிடா தெங்கள்
கொள்கை வீரரின் காலடி மண்ணிலே
நின்றுகொண்டொரு போர்க்கொடிதூக்குவோம்
நிச்சயம் ஒரு தாயகம் காணுவோம்

www.tamilarangam.net